இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

ண்டறிக்கை 2011

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான

ஆண்டறிக்கை, கணக்குக் கூற்றுக்கள்

மற்றும்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தலைமை அலுவலகம்

இல. 11, டியுக் வீதி,

கொழும்பு - 01

பணிப்பாளர் சபை - 2011

பெயர்		பதவி
திரு பிரியன்ச டி அல்விஸ்	-	தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
திரு கே.கே.எஸ். பெரேரா	-	நிறைவேற்றுப் பணிப்பாளர்
திரு எம்.எஸ்.எம். பெர்ணாந்து	-	பணிப்பாளர் (நடவடிக்கை)
திரு கே.பி.ஜி.ஐ.என். பண்டார	-	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திருமதி ஏ.ஆர். விக்ரமசிங்க	-	பணிப்பாளர் சபை உறுப்பினர் / திறைசேரியின் பிரதிநிதி
திரு எஸ். அபேவிக்ரம	-	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு டபிள்யு. ஜோஜ் லான்சா	-	பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு பிரியன் இவான் குணதிலக	-	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2011 ஜுலை முதல்)
திரு மலிந்த குணதிலக்க	-	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2011 ஜுலை முதல்)
திரு ஆர்ஏ.டி.எம். ரூபசிங்க	-	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2011 ஜுலை முதல்)
திரு ஆர்.ஆர். லியனவல	-	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2011 ஜுன் வரை)
திரு பி..கே. உளுவிசிஹேவா	-	பணிப்பாளர் சபை உறுப்பினர் (2011 ஜுன் வரை)

முகாமைத்துவக் குழு - 2011

தவிசாளர் / பி.நி.அ.	திரு பிரியன்ச டி அல்விஸ்
பொது முகாமையாளர்	திரு. ஆர். சோமரத்ன
நிதி முகாமையாளர்	திரு. ஆர்.எம். அபேசிங்க
கணக்காளர்	திருமதி எஸ்.டி. நயனா ரனசிங்க
உதவி முகாமையாளர் (நிருவாகம்)	திருமதி. பீ.வீ.எல்.சீ. பெனரகம
உதவி முகாமையாளர் (பெருந்தோட்டம்)	திரு வீ. கதிர்காமர்
கணக்காய்வு அலுவலர்	திரு ஜே.பி. தஹநாயக்க
உதவி கணக்காளர்	திரு ரீ.ரீ. மொரஹெல
உதவி முகாமையாளர் - காணி	செல்வி ஜி.டி.எஸ்.சீ. சுதசிங்க
கனிஷ்ட நிறைவேற்றுனர்	திருமதி லலனி கமராலலாகே
கனிஷ்ட நிறைவேற்றுனர்	திரு ஏ.டீ.எம். ஜயதிலக்க
செயலாளர்	திருமதி ஆன் குணவர்தன

பெருந்தோட்டங்களின் நிறைவேற்றுனர்கள்

திரு உபாலி அபேகோன்	முகாமையாளர் - பெருந்தோட்டங்கள்
திரு ரீ.எம்.பீ.ஜீ.ஐ.கே. தென்னக்கோன்	பெருந்தோட்ட அத்தியட்சகர் - அலகொல்ல
திரு ஏ.சீ. அபேவர்ன	பெருந்தோட்ட அத்தியட்சகர் - கொட்டகங்க
திரு எஸ்.பி. ஹேரத்	பெருந்தோட்ட அத்தியட்சகர் - கல்பிஹில்ல
திரு ஐ.டபிள்யு.ஆர். ஜயவர்த்தன	பெருந்தோட்ட அத்தியட்சகர் - கோமர
திரு ரீ.ஆர்.எச். ஹேவகே	பெருந்தோட்ட அத்தியட்சகர் - ஹாகல
திரு கே.ஜீ. குணரத்ன	பெருந்தோட்ட அத்தியட்சகர் - ஹெயார்பார்க்
திரு ஆர்.ஏ.எம். தயாரத்ன	பெருந்தோட்ட அத்தியட்சகர் - ஹுன்னஸ்கிரிய
திரு எச்.என்.பி. ஜினசேன	பெருந்தோட்ட அத்தியட்சகர் - கெலேபொக்க
திரு வை.ஏ.ரி.பி. வட்டுகொடபிற்றிய	பெருந்தோட்ட அத்தியட்சகர் - மிட்லன்ட்
திரு டபிள்யு.ரி.கே.சமரதுங்க	பதில் பெருந்தோட்ட அத்தியட்சகர் - ஓபல்கல
திரு ஆர்.ஏ.ஆர்.எம். ரனவக	பெருந்தோட்ட அத்தியட்சகர் - ரங்கல
திரு ஏ.ஏ. சேனாரத்ன	பெருந்தோட்ட அத்தியட்சகர் - வலஹந்துவ
திரு எஸ்.வை. லியனகே	பெருந்தோட்ட அத்தியட்சகர் - பிராந்திய அலுவலகம்

எமது நோக்கு

மிகச் சிறந்த நிலைபேறான பெருந்தோட்ட நிறுவனமாதல்

எமது பணி

நிலையான வளப் பயன்பாட்டின் மூலம் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன் மிக்க நல்லதொரு தேநீர்க் கோப்பையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் விவசாய உற்பத்திகளை உற்பத்தி செய்வதுடன் வேறு சேவைகளையும் ஆற்றுவதன் மூலம் இலாபகரமான அரச பெருந்தோட்ட நிறுவனமாதல்.

பணிப்பாளர் சபையின் அறிக்கை - 2011

1. அறிமுகம்

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனமானது, 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு அரசுக்கு உரித்தான பெருந்தோட்டங்களை முகாமைத்துவம் செய்வதோடு அதன் முகாமைத்துவத்தின் கீழ் இ.அ.பெ.கூ சில தோட்டங்களையும் வைத்திருக்கின்றது. 1972 ஆம் ஆண்டின் காணி மறுசீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டதுடன், சகல இலாபகரமான பெருந்தோட்டங்களும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு, தோட்டங்களின் சிறந்த முகாமைத்துவத்திற்காக 1975 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி ஆகிய இரண்டு நிறுசனங்களிடமும் அவை பொறுப்பளிக்கப்பட்டன.

1992 ஆம் ஆண்டில் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஆதனங்களை தனியார் கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தின் இரண்டாம் அத்தியாயத்தினால் கீழ், அரசாங்க பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட 450 தோட்டங்கள் பிராந்திய கம்பனிகளுக்கு குத்தகை அடிப்படையில் பொறுப்பளிக்கப்பட்டதுடன், மிகவும் அதிகமான நட்டம் மற்றும் குறைந்த விவசாய விளைவுப்பெருக்கம் கொண்ட மத்திய மலைநாட்டிலுள்ள 55 தோட்டங்கள் அரசின் கைவசம் இருந்தன. மேற்படி 55 பெருந்தோட்டங்களில் 32 இ.அ.பெ. கூட்டுத்தாபனத்திடம் பொறுப்பளிக்கப்பட்டதோடு அவற்றிலும் மீண்டும் எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்ட 11 பெருந்தோட்டங்கள் வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியிடம் கையளிக்கப்பட்டதுடன், இதனடிப்படையில் இ.அ.பெ.கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின் கீழ் 16 பெருந்தோட்டங்கள் மாத்திரமே கொண்டுவரப்பட்டன. 1992 இல் ஊழியர்கள் ஓய்வுறுத்தப்பட்டு இ.அ.பெ. கூட்டுத்தாபனம் மூடப்பட்டதுடன், 1994 இல் புதிய ஊழியர்கள் மீண்டும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இன்று இ.அர.பெ.கூ., அரச வள முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் வருவதுடன் பல தோட்டங்கள் குறுகிய காலப்பிரிவுகளில் தனியார் தரப்புக்களுக்கு ஒப்படைக்கப்பட்டு அல்லது இணைக்கப்பட்டதுடன் 12 தோட்டங்களை தனதுடமையாக வைத்திருக்கின்றது., இ.அ.பெ. கூட்டுத்தாபனத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற தோட்டங்களின் எண்ணிக்கை 12 ஆக இருப்பதோடு அவை பின்வரும் மாவட்டங்களின் கீழ் வருகின்றன.

மாத்தளை மாவட்டம்	மிட்லன்ட்ஸ் மற்றும் ஓபல்கல்ல அரச பெருந்தோட்டங்கள்
கண்டி மாவட்டம்	அலகொல்ல, கொட்டகங்க, கல்பிஹில்ல, ஹெயார் பார்க், ஹுன்னஸ்கிரிய, கெலேபொக்க, ரங்கல்ல, கோமர அரச பெருந்தோட்டங்கள்
காலி மாவட்டம்	வலஹந்துவை அரச பெருந்தோட்டம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 12 பெருந்தோட்டங்களில், 11 பெருந்தோட்டங்கள் மலைநாட்டு தேயிலையை உற்பத்தி செய்வதுடன், வலஹந்துவை பெருந்தோட்டமானது இறப்பரை உற்பத்தி செய்கின்றது..

மீளாய்வு ஆண்டில் 08 சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

2. தோட்டங்களின் தற்போதைய நிலைமை

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற தோட்டங்களின் காணி விஸ்தீரனங்களின் ஹெக்டயார் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

விபரம்	ஹெக்டயார்
பயிர் செய்யப்பட்ட காணிகள்	6,114.05
கட்டடங்கள்	480.56
மரமும், பாதுகாக்கப்பட்ட வனமும்	2,708.43
வீதிகள்	187,.38
ஏனைய வெற்றுக் காணிகள்	192.82
மொத்த காணிகளின் அளவு	**9,683.24**

இ.அ.பெ.கூட்டுத்தாபனம் அலகொல்ல, கல்பிஹில்ல, கெல்லேபொக்க, மிட்லன்ட்ஸ் மற்றும் ராஜகல்ல ஆகிய ஆறு தேயிலைத் தொழில்சாலைகளை உரித்தானதாக கொண்டுள்ளதோடு இவற்றில் ளில் சீ.ரீ.சீ. உற்பத்தி மேற்கொள்ளப்படுவதுடன், குமெர தொழில்சாலையில் உற்பத்திகள் பாரம்பரிய முறையில் இடம்பெறுகின்றன.

3. மரங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனங்கள்

விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மட்டத்தில் காணப்படுகின்ற மரங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் பாரியளவில் இ.அ.பெ.கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாக உள்ளதுடன், அவற்றின் பெறுமதி சுமார் 3000 மில்லியன் ரூபாவாகும். அக்காணிகளின் அளவுகள் பின்வருமாறாகும்;

பெருந்தோட்டம்	காணியின் பரப்பளவு	வெட்டி எடுக்கக்கூடிய மரங்கள்
அலகொல்ல	79.38	500
கொட்டகங்க	24.14	350
கல்பிஹில்ல	20.21	16,720
கோமர	71.50	7,100
ஹாகல	84.62	11,700
ஹெயார்பார்க்	-	1,800
ஹுன்னஸ்கிரிய	25.00	18,247
கெலேபொக்க	15.00	30,824
ரங்கல	68.00	10,000
மிட்லன்ட்	227.14	14,000
ஓபல்கல	68.00	16,868
வுட்சையிட்	6.50	6,800
மொத்தம்	689.49	134,909

உபாயமுறையில் மரங்களை வெட்டுவதற்கும், கட்டம் கட்டமாக மீண்டும் மரங்களை நாட்டுவதற்கும் தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளன.

4. செயலாற்றுகை

மீளாய்வின் கீழான ஆண்டின் மொத்த தேயிலை செய்கைகளின் விளைச்சல் 2,166,037 கி.கி. ஆகுமென்பதுடன், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 1%ஆன வீழ்ச்சியாகும். ஆண்டின் இறுதியில் ஒரு ஹெக்டாயாருக்கு சராசரி விளைச்சல் 674 கிலோ கிராமாக பேணிவர முடிந்ததுடன், உச்ச விளைச்சலான 1094 கி.கி. கல்பிஹில்ல பெருந்தோட்டத்தில் பதிவாகியிருந்தது. இது சராசரி உத்தேச விளைச்சலிலும் பார்க்க 420 கி.கி. வளர்ச்சியாகுமென்பதுடன், மேற்படி தோட்டத்தின் கடந்த ஆண்டின் விளைச்சலிலும் பார்க்க இது 185 கி.கி. அதிகரிப்பாகும்.

5. திறைசேரிக் கொடைகள்

இந்த ஆண்டில் திறைசேரியின் கொடையொன்று கிடைத்திருக்கவில்லை என்பதுடன், 50% ஆன மிகைக் கட்டணமும் உள்ளடங்களாக பணிக்கொடைகளைச் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் பணம் பயன்படுத்தப்பட்டது.

6. இலாபகரமான தன்மை

விபரம்	2011	2010	வித்தியாசம்	%
மொத்த உற்பத்தி – தேயிலை கி.கி.	2,166,037	2,188,835	22,79	-1
வருடாந்த சராசரி ரூபா	243.77	247.80	4.04	-1.6
தேயிலை உற்பத்தி செலவினம் ரூபா	330.46	291.11	39.35	-13.5
ஒரு கி.கி. இற்கான நட்டம் ரூபா	86.69	43.31	33.38	- 100
ஆண்டில் பதிவான மொத்த நட்டம் ரூபா	187,774,000	94,798,000	70,514,900	-98

7. ஒப்பீட்டு ரீதியான உற்பத்தி வருமான விபரம்

கடந்த ஐந்து வருடங்களுக்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்;

ஆண்டு	உற்பத்தி செய்யப்பட்ட மொ.தேயிலை கி.கி.	சராசரி ரூ.	சராசரி உற்பத்தி ரூ.	இலாபாம்/நட்டம் ஒரு கி.கி. ரூ.	மொத்த இலாபம் / நட்டம் ரூ.
2011	2,166,037	243.77	330.46	(86.69)	(187,773,700)
2010	2,188,835	247.80	291.11	(43.31)	(94,798,000)
2009	2,069,706	248.98	283.05	(34.07)	(70,514,900)
2008	2,721,633	206.00	218.68	(12.68)	(34,510,300)
2007	2,460,086	225.97	220.46	5.51	13,555,000

8. பயிரிடல், பராமரிப்பு மற்றும் உரம் இடுதல்.

மீளாய்வு ஆண்டில் வெளிக்கள அபிவிருத்தி மற்றும் பயிர்ச் செய்கைச் செலவினமாக 64.9 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதுடன், நிறுவனம் எதிர்நோக்கியிருந்த கடுமையான நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் அவற்றில் 25.2 மில்லியன் ரூபா உரத்திற்குச் செலவிடப்பட்டது.

9. செயலாற்றுகை

உற்பத்திச் செலவினத்தைக் குறைப்பதற்கும், உற்பத்திக்கு உயர்ந்த விலையைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தேயிலைக் கொழுந்தின் தரம் உத்தேசிக்கப்பட்ட தர மட்டத்தில் இருக்காமை மற்றும் எமது தொழில்சாலைகளில் உள்ள காலம் கடந்த இயந்திர சாதனங்கள் மற்றும் உயர் தரமான தேயிலையை உற்பத்தி செய்வதற்காக தொழில்சாலைகளை நவீனமயமாக்கும் பொருட்டு தேவைப்படுகின்ற நிதி இல்லாமையும் காரணமாக இந்த இலக்கை அடைந்து கொள்ள முடியவில்லை.

10. மூலதனச் செலவினம்

பெரும் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்த போதிலும் இ.அ.பெ. கூட்டுத்தாபனம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், புதிய வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

- முதிர்ச்சியடையாத பயிர்கள் - ரூபா 6,493,877/- : அமுலிலுள்ள வேலைகளின் பெறுமதி
- கட்டடம் - ரூபா 111,765/- : மேம்படுத்தும் பெறுமதி
- இயந்திர சாதனங்கள் - ரூபா 623,417/- : பிரதான புதுப்பித்தல்கள்
- உபகரணம் - ரூபா 46,729/- : புதிய கொள்வனவுகள்
- வாகனம் - ரூபா 1,048,994/- : பிரதான புதுப்பித்தல்கள்

11. பதவியணியினரும், ஊழியப் படையும்

மேலதிக பதவியணியினரை இனங்கண்டு தொண்டர் அடிப்படையில் ஓய்வுபெறும் திட்டமொன்று தொடர்பில் இணங்கியிருந்த போதிலும் ஆண்டில் எதிர்நோக்கியிருந்த திரவநெருக்கடி நிலைமை காரணமாக ஊழியர்களை ஓய்வுறுத்த முடியவில்லை.

பெருந்தோட்டங்களில் சேவையாற்றுகின்ற ஊழியர்களில் சுமார் 600 பேர் வயது 60 பூர்த்தியடைந்ததன் காரணமாக அவற்றின் உற்பத்தித்திறன் குறைவடைந்திருந்தது. உச்ச உற்பத்தித்திறனை பெற்றுக் கொள்வதற்கும், உற்பத்திச் செலவினத்தைக் குறைப்பதற்குமாக அவ்வாறான ஊழியர்களுக்கு பணிக்கொடையொன்றைச் செலுத்தி ஓய்வுறுத்தி இளம் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கொள்கை ரீதியாக இணங்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலகத்தில், வெளிக்களத்தில், தொழில்சாலையில் சேவையாற்றி வருகின்ற வயது 60 ஐத் தாண்டியுள்ள ஊழியர்களுக்குப் பதிலாக தோட்டங்களில் வெளிக்களத்தில் தகைமை பெற்றுள்ள இளைஞர்களை இனங்கண்டு அனுபவமிக்க ஆட்கள் மூலம் அவர்களுக்கு உரிய பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான முறையியல் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

12 நிதி நிலைமை

செயற்படு மூலதனம்

ஆண்டு	2011	2010
நடைமுறைச் சொத்துக்கள்	280,869,504	321,860,485
நடைமுறைப் பொறுப்புக்கள்	966,218,163	867,805,433
	(685,348,659)	**(545,944,946)**

கடந்த ஆண்டில் செயற்படு மூலதனப் பற்றாக்குறை அதிகரித்ததுடன், நாளாந்த ஊழியர் கொடுப்பனவுகள், பதவியணியினரின் சம்பளம் மற்றும் நியாயாதிக்க கொடுப்பனவுகள் அதிகரித்தமை இதற்கான காரணமாகும்.

காசுப்பாய்ச்சல்

செயற்படு மூலதனப் பற்றாக்குறை அதிகரித்தன் காரணமாக 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் வங்கி மேலதிகப் பற்றும் அதிகரித்துள்ளது.

13. எதிர்காலப் பயணம்

வினைத்திறனை உயர் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கும், பெருந்தோட்டங்களிலிருந்து உயர் விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான பிரதான துறைகள் சில இனங்காணப்பட்டு தற்போது அவை பற்றி ஆராயப்பட்டு வருகின்றது. அவையாவன,

- தேயிலை மீளப் பயிர் செய்தல்
- இடைவெளியுள்ள இடங்களில் தேயிலைச் செடிகளை பயிரிடல்
- அமைப்பின் காசுப் பாய்ச்சலை வளர்ப்பதற்கான பலகை வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்
- தற்போதுள்ள தேயிலை நாற்று மேடைகளை அபிவிருத்தி செய்தல்
- சிறிய நீர்க் கருத்திட்டங்களை தாபித்தல்
- சுற்றாடல் சார் சுற்றுலாத்துறையை அறிமுகம் செய்தல்
- HACCP மற்றும் ISO சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்காக தொழில்சாலைகளை நவீனமயப்படுத்தல்
- பழைய வாகனங்களை உபயோகத்திலிருந்து அகற்றுவதும், அதற்குப் பதிலாக தோட்டங்களின் உபயோகத்திற்குப் பொருத்தமான வாகனங்களைக் கொள்வனவு செய்வதும்.
- உச்சளவான உற்பத்தித்திறனைப் பெற்றுக் கொள்வதற்காக மனித வளத்தை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்தல்.

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் எதிர்நோக்கியுள்ள கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களிலுள்ள பதவியணியினர் மற்றும் ஏனைய சகல தரப்பினர்களினதும் பூரண ஒத்துழைப்பு காரணமாகவும், அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சிடம் கிடைத்த ஒத்துழைப்பு காரணமாகவும் தலைவர் என்ற வகையில் எனது பணிகளை மிக்க இலகுவாகவும், நல்ல முறையிலும் நிறைவேற்றுவதற்கு எனக்கு ஆற்றல் கிடைத்ததென்பதை இங்கு நன்றியுடன் குறிப்பிட வேண்டும்.

தலைவர் / பிரதம நிறைவேற்று அலுவலர்
இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

தோட்டங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் (கூட்டிணைக்கப்பட்ட கணக்குகள்)
2011 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான
ஐந்தொகை

	குறிப்பு		2011 (ரூபா.)	2010 (ரூபா.)
சொத்துக்கள்				
நடைமுறையல்லாச் சொத்துக்கள்				
சொத்து, பொறித்தொகுதி, உபகரணங்கள்	1	17/18	644,120,161	503,844,633
நிறுத்திவைக்கப்பட்ட சொத்துக்கள்	2	19	42,162,674	32,671,001
அமுலிலுள்ள மூலதன வேலைகள்	3	19	1,806,644	1,131,378
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்			**688,089,479**	**537,647,013**
முதலீடு - பீசீசீ கம்பனி			15,404,568	15,404,568
நடைமுறைச் சொத்துக்கள்				
நிலையான வைப்புக்கள்			57,482,590	10,000,000
பொருட்பதிவேடுகள் (இறுதி இருப்புக்கள்)	4	19	66,718,545	72,952,206
இருப்புக்கள் - உள்ளீடுகளும், நுகர்வும்	5	20	10,287,338	7,787,888
வைப்புக்கள்	6	20	68,780,626	93,847267
வியாபாரக் கடன்பட்டோர்	7	20	120,552,495	127,114,692
கிடைக்க வேண்டியவைகள்	8	21	32,729,199	45,768,070
காசும், காசுக்குச் சமமானவைகளும்	9	21	(91,085,856)	(51,039,002)
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்			**265,464,936**	**306,431,122**
			968,958,082	**859,482,703**
உரிமையாண்மையும், மூலதன ஒதுக்கீடுகளும் - நிதியளிக்கப்பட்டவை				
1958 இன் (1) ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 07 இன் மூலம் சான்றுப்படுத்தியவாறு			8,000,000	8,000,000
1958 இன் 2 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 07 இன் கீழ் அதிகரிக்கப்பட்டவை				
1981 ஆகஸ்ட் 08 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம்			3,889,000,000	3,889,000,000
			3,897,000,000	**3,897,000,000**
மூலதன ஒதுக்கம்			142,051,688	142,051,688
அரச பங்களிப்பு			395,987,977	395,987,977
உரிமையாண்மைக் கணக்கின் சீராக்கல்கள்	10	22	(880,292,080)	(864,450,572)
			(342,252,416)	**(326,410,907)**
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்				
காப்புறுதி நிதிக் கணக்கு			18,145,415	18,145,415
நிறுத்திவைக்கப்பட்ட பொறுப்புக்கள் - பணிக்கொடை	11	22	324,914,776	194,762,672
முன்னைய கணக்கின்படி தொழில்படாத நிலுவை			1,933,044	105,180,092
			344,993,236	**318,088,180**
நடைமுறைப் பொறுப்புக்கள்				
கடன் கொடுத்தோரும், பொறுப்புக்களும்	12	22/23	**966,218,163**	**867,805,431**
			968,958,982	**859,482,703**

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் இறுதிக் கணக்குகளுக்கான குறிப்புகள் இந்தக் கணக்குக் கூற்றுக்களின் அத்தியாவசியமானதொரு பகுதியாகும். இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமக் கண்காணிப்புச் சபையின் தேவைகளுக்கு ஏற்புடையவாறும், இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள முறையிலும் இந்தக் நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

தலைவர் - இ.அ.பெ.கூ.

நிதி முகாமையாளர் - இ.அ.பெ.கூ.

(தோட்டங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் கூட்டிணைக்கப்பட்ட கணக்குகள்)

2011 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

	குறிப்பு	ியபந ழெ	2011 (ரூபா)	2010 (ரூபா)
வருமானம்				
விற்பனை வருமானம் - தேயிலை	13	24	493,125,426	501,491,402
- சிறிய பயிர்கள்	14	24	4,123,220	3,941,566
- பச்சைத் தேயிலை உற்பத்தி			54,558,617	69,644,440
மொத்த வருமானம்			**551,807,263**	**575,077,408**
குறைக்க - உற்பத்திக் கணக்கிலிருந்தான விற்பனைக் கிரயம்			(703,258,306)	(648,677,914)
			(151,451,043)	**(73,600,507)**
கூட்டுக - ஏனைய வருமானம்				
ஏனைய வருமானம் -பெருந்தோட்டங்கள் மற்றும் தலைமை அலுவலகம்	15	2 4	217,991,734	156,061,689
சேமிப்புக் கணக்கு வட்டி				1,577,450
மொத்த வருமானம் (நட்டம்)			**66,540,690**	**84,038,632**
குறைக்க - ஆளுக்குரிய செலவினம்	16	25	26,787,175	22,959,294
பெருந்தோட்ட நிருவாக செலவினம்	17	25 /26	61,294,550	47,931,000
நிதிக் கட்டணங்கள்	18	26	30,872,441	27,323,019
வருமான வரிக்கு முந்திய இலாபம்			**(52,413,476)**	**(14,174,680)**

2011.12.31 ஆம் திகதிக்கான நிதிப் பாய்ச்சல் கூற்று

விசேட அம்சங்கள் மற்றும் வருமான வரிக்கு முந்திய தேறிய இலாபம்		**(52,413,476)**
சீராக்கல்கள்		
கூட்டுக - தேய்மானம்	**த.அ.**	1,105,000
	பெருந்தோட்டம்	18,617,504
செயற்பாடுகளிலிருந்தான சீராக்கல் செய்யப்பட்ட இலாபம்		**(32,690,972)**
குறைக்க – கிடைத்துள்ள ஏனைய வருமானங்கள் - வலஹந்துவை		15,576,630
செயற்பாட்டு இலாபம் / (நட்டம்) செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர்		**(48,267,602)**
கூட்டுக - பணிக்கொடைக்கான ஏற்பாடு - தலைமை அலுவலகம்		2,686,334
	தோட்டங்கள்	18,105,993
		(27,475,275)
செயற்படு மூலதனத்திலான மாற்றங்கள்		
(அதிகரிப்பு) குறைவு	பதிவேடுகள்	6,233,661
(அதிகரிப்பு) குறைவு	உள்ளீடுகளும், நுகர்வுப் பொருட்களும்	(2,499,450)
(அதிகரிப்பு) குறைவு	கடன்பட்டோர், வைப்புக்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள்	44,667,711
(அதிகரிப்பு) குறைவு	நிறுத்திவைக்கப்பட்ட பொறுப்புக்கள் -நீதிமன்றத்திற்கு செ.வே.பணிக்கொடை	(91,102,642)
(அதிகரிப்பு) குறைவு	வர்த்தக மற்றும் வேறு செலுத்த வேண்டியவைகள்	98,412,732
செயற்படு மூலதன மாற்றங்களின் பின்னரான செயற்படு இலாபம்		**28,236,737**
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான காசுப் பாய்ச்சல்		
நிலையான வைப்புக்கள்		47,482,590
பொறியும், தளபாடப் பொருத்தல்களும்		1,236,519
கட்டடம்		111,765
இயந்திர சாதனங்கள்		623,417
நிறுத்திவைக்கப்பட்ட சொத்துக்கள்		9,491,673
மோட்டார் வாகனங்கள்		2,008,923
மரம் நடுகை		6,493,876
வன முகாமைத்துவம்		161,000
அமுலிலுள்ள முலதன வேலைகள்		673,828
		6**8,283,592**
ஆண்டின் தேறிய அதிகரிப்பு / (குறைவு)		**(40,046,854)**
ஆண்டின் ஆரம்பத்தில் காசும், காசுக்குச் சமமானவைகளும்		(51,039,002)
ஆண்டின் இறுதியில் காசும், காசுக்குச் சமமானவைகளும்		(91,085,856) **(40,046,854)**

ஐந்தொகை பற்றிய குறிப்புகள் - 2011 டிசம்பர் 31 ஆம் திகதி

பொறித் தொகுதியும் கருவிகளும் - தோட்டம் மற்றும் தலைமை அலுவலகம்

குறிப்பு -01

	01.01.2011 திகதியில் உள்ளவாறான செலவு பெறுமதி			31.12.2011 திகதியில் உள்ளவாறான செலவு பெறுமதி		ஆண்டுக்கான தேய்மானம்	ஆண்டுக்கான ஒதுக்கீட்டுத் தேய்மானம்	துலைமை அலுவலகம் 31.12.2011 உள்ளவாறான திரட்டிய தேய்மானம்	யள யவ 31.12.2011
கட்டிடங்கள்	4,959,427			4,959,427	4,959,427			4,959,384	43
கருவிகள்	9,996,252	1,133,690		11,129,942	8,827.922	287,750		9,115,672	2,014,270
தளபாடமும் பொருத்துகளும்	1,800,492	6,100		1,806,592	1,458,359	4,350		1,462,709	343,883
காணி – தெமட்டகொட	2,386,505	147,613,495		150,000,000				-	150,000,000
வாகனங்கள்	65,155,473	959,928		66,115,401	62,755,413	796,240		63,551,653	2,563,748
வன காணி – அபிவிருத்தி	1,484,340	161,000		1,645,340				-	1,645,340
கணனி மென்பொருள்		50,000		50,000		16,660		16,660	33,340
மொத்தம்	**85,782,489**	**149,924,213**		**235,706,702**	**78,001,078**	**1,105,000**		**79,106,078**	**156,600,624**

தோட்டங்கள்	01.01.2011 திகதியில் உள்ளவாறான செலவு பெறுமதி	சேர்க்கைகள்	ஆகற்றழல்	31.12.2011 திகதியில் உள்ளவாறான செலவு பெறுமதி	1.01.2011 உள்ளவாறான திரட்டிய தேய்மானம்	ஆண்டுக்கான தேய்மானம்	ஆண்டுக்கான ஒதுக்கீட்டுத் தேய்மானம்	31.12.2011 உள்ளவாறான திரட்டிய தேய்மானம்	நேவ டீழழம ஏயடரந யள யவ 31.12.2014
மேம்படுத்தப்படாத காணி	1,604,663			1,604,663				-	1,604,663
காணிக்கான மேம்படுத்தல்கள்	34,660,023			34,660,023	27,290,969			27,290,969	7,369,055
ஏனைய ஆதனங்கள்	6,672,972			6,672,972	6,672,972			6,672,972	-
முதிர்ந்த பெருந்தோட்டம்	214,482,500	176,678,175		391,160,675	79,869,351	5,437,597		85,306,948	305,853,727
முதிராத பெருந்தோட்டம்	237,864,680	6,493,876	176,678,175	67,680,381				-	67,680,381
கட்டடங்கள்	141,847,976	111,765		141,959,741	75,583,728	3,733,515		79,317,243	62,642,498
இயந்திரசாதனம்	94,422,769	623,417		95,046,186	75,742,069	3,057,835		78,799,904	16,246,282
தளபாடமுமம் பொருத்துகளும்	4,190,470			4,190,470	4,129,722			4,129,722	60,748
கருவிகள்	16,304,846	46,729		16,351,575	11,188,251	387,999		11,576,250	4,775,325
வாகனங்கள்	73,700,691	1,048,995		74,749,686	47,726,966	5,735,862		53,462,828	21,286,858
மொத்தம்	**825,751,591**	**185,002,958**	**176,678,175**	**834,076,373**	**328,204,028**	**18,352,808**		**346,556,836**	**487,519,537**
முழு மொத்தம்	**911,534,080**	**334,927,171**	**176,678,175**	**1,069,783,075**	**406,205,106**	**19,457,808**	**-**	**425,662,914**	**644,120,161**

2011 டிசம்பர் 31 ஆம் திகதிய ஐந்தொகை பற்றிய குறிப்புகள்

குறிப்பு – 02	2011	2010
	ரூபா	ரூபா
நிறுத்திவைக்கப்பட்ட சொத்துக்கள்		
எரிபொருள் விறகு	6,190,670	4,985,608
மூலிகைச் செடிகள்	430,353	430,353
குறைக்க - (தேய்மானத்தின் கீழ் பதியப்பட்ட தொகை)	(273,211)	(248,212)
பலகை மரங்கள்	3,383,061	2,874,628
தென்னைப் பயிர்ச்செய்கை	2,666,110	2,621,110
மீள் வனப் பயிர்ச் செய்கை	471,762	251,176
கருவாப் பயிர்ச்செய்கை	1,703	-
சாதிக்காய்	40,811	40,811
இடைவெளியாக உள்ள காணியில் பயிரிடல்	18,914,714	17,587,824
ஏலக்காய்	32,289	32,289
நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்தல்	52,192	52,192
மிளகுப் பயிர்ச் செய்கை	1,979,513	1,413,118
இறப்பர் பயிர்ச் செய்கை	5,286,765	583,287
கிராம்புப் பயிர்ச் செய்கை	290,596	3,556
கோப்பிப் பயிர்ச் செய்கை	1,481,191	1,372,948
வாழைப் பயிர்ச் செய்கை	238,592	238,592
லெமன்கிறாஸ்	561,193	431,718
இஞ்சிப் பயிர்ச் செய்கை	371,238	
யாணைப்புல் (மானா)	43,130	
மொத்தம்	**42,162,674**	**32,671,001**

குறிப்பு - 03		
மூலதன அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம்		
கொட்டகஹவத்தை தோட்டம் (20 மலசலகூடங்கள்)		
புதிய மின்சாரம் வழங்கல்	222,532	66,882
சிவில் நிர்மாணிப்புகள்	1,584,112	1,089,496
குறைக்க - தேய்மானத்துடன் கூட்டப்பட்ட அகற்றப்பட்ட தொகை		(25,000)
	1,806,644	**1,131,378**

குறிப்பு - 04		
பதிவேடுகள் - (இறுதி இருப்பு)		
இருப்பு - காசாக்கப்பட்டவை (கொழும்பு ஏலம்)	60,153,545	45,236,756
இருப்பு விற்பனை செய்யப்படாதது	6,565,000	27,709,928
இணங்காத தேயிலை இருப்பு		5,522
மொத்தம்	**66,718,545**	**72,952,206**

2011 டிசம்பர் 31இல் உள்ளவாறான பெருந்தோட்டங்களின் ஐந்தொகைக்கான குறிப்புகள் -

	2011 (ரூபா)	2010 (ரூபா)
குறிப்பு 05		
இருப்புக்கள்		
நாற்றுமேடை பயிர்கள்	4,206,733	3,188,633
நுகர்வுப் பண்டங்கள்	2,062,815	4,597,252
மேலதிகமாக உள்ளவை	23,036	2,003
உரம்	3,739,947	-
ஏனைய பயிர்ச் செய்கைகள்	254,807	-
மொத்தம்	**10,287,338**	**7,787,888**
குறிப்பு – 06		
வைப்புக்கள்		
சட்ட நடவடிக்கைகளுக்கான வைப்புக்கள்		2,455,251
பிணை வைப்புக்கள்	10,000	139,983
ஊ.சே.நிதியத்தின் வழக்குகளுக்கான வைப்புக்கள்	67,270,625	81,752,034
உரக் கம்பனிக்குச் செலுத்தப்பட்ட முற்பணம்		9,500,000
பணிக்கொடைக்கான வைப்பு	1,500,000	
மொத்தம்	**68,780,625**	**93,847,268**
குறிப்பு– 07		
கடன்பட்டோர்		
நானாவித கடன்பட்டோர்	3,047,694	3,047,694
குறைக்க : ஐயக்கடனுக்கான ஒதுக்கம்	(1,591,349)	(1,591,349)
வர்த்தக கடன்பட்டோர் - தலைமை அலுவலகம்	880,434	
உற்பத்திக்கான கடன்பட்டோர்	752,520	752,520
வாடகைக்கான கடன்பட்டோர்		29,303,638
வாடிக்கையாளர்களான கடன்பட்டோர்	41,071,407	41,071,407
நானாவித வருமானக் கடன்பட்டோர்	2,588,530	2,588,530
ஜனவசம முன்னைய கணக்கு மீதி	1,668,269	,668,269
ஜனவசம வாகனப் பயன்பாட்டுக் கணக்கு		6,432,000
வெஸ்ரன் புரோக்கர்ஸ்		39,268
சமூக, நலன்புரிக் கருத்திட்டம் 11	38,000	38,000
பர்த் தோட்டத்தின் நடைமுறைக் கணக்கு	16,321,251	38,533,429
வாகனப் பயன்பாட்டுக்காக எல்கடுவ பெருந்தோட்டம்		1,127,000
இடைப்பட்ட கணக்கு	176,263	197,640
ஏனைய கடன்பட்டோர் - பெருந்தோட்டங்கள்	2,125,412	3,906,647
வாடிக்கையாளர் திணைக்களம்	33,055	
வலஹந்துவை நடைமுறைக் கணக்கு	17,653,477	
பிராந்தியக் கணக்கு	419,111	
மரங்களுக்கான கேள்விக் கடன்பட்டோர்	31,669,580	
பிராந்திய அலுவலகங்களின் உறுதிப்படுத்தப்படாத பட்டியல்கள்	3,698,841	
மொத்தம்	**120,552,495**	**127,114,692**

2011 டிசம்பர் 31இல் உள்ளவாறான பெருந்தோட்டங்களின் ஐந்தொகைக்கான குறிப்புகள்

குறிப்பு – 08	2011 (ரூபா)	2010 (ரூபா)
கிடைக்க வேண்டியவை		
செக்ரோல் மற்றும் பதவியணியிடமிருந்து கிடைக்க வேண்டியவை	16,490,600	4,548,427
பண்டிகை முற்பணம் - தலைமை அலுவலகமும் தோட்டங்களும்	50,480	16,339,021
சம்பள முற்பணம்	2,000	
குத்தகைத் தவணைப் பணம் கிடைக்க வேண்டியவை	15,780,848	15,780,848
முற்பணக் கணக்கு	152,271	209,000
கிடைக்க வேண்டிய வெற்வரி	47,263	47,263
உறுதிப்படுத்தப்படாத பட்டியல்கள் - பெருந்தோட்டங்கள்		685,413
புத்தகக் கடன்	57,500	3,300
வருகைக்கான மிகையூதியம்	89,250	89,250
இங்கிரிய நடைமுறைக் கணக்கு	20,255	612,284
வன முகாமைத்துவம் (முன் கொடுப்பனவு)		1,484,340
உதவி அத்தியட்சகர் ஹேகல்ல		67,019
வாகனம் ஏல விற்பனை		49,905
மரங்களுக்கான கேள்வி நடைமுறை – கடன்பட்டோர்		5,852,000
விசேட முற்பணம்	38,732	
மொத்தம்	**32,729,199**	**45,768,070**

குறிப்பு – 09

காசும், காசு சமனிகளும்

தபால் கட்டுநிதி – பெருந்தோட்டங்கள்	5,775	4,347
மாற்றல்களுக்கான காசோலைகள்	7,070,327	7,087,851
கையிலுள்ள காசு – பெருந்தோட்டங்கள்	19,537	19,558
வங்கியிலுள்ள காசு – பெருந்தோட்டங்கள்	202,832	601,044
இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு இல. 2349701	14,400	14,400
நிறைவேற்றல்லாத மருத்துவக் கணக்கு இல. 2327539	261,219	148,667
இலங்கை வங்கி – ஹைட்பார்க் கோனர் கிளை - சேமிப்புக் கணக்கு இல. 2327549	(1,800,725)	(178,808)
இலங்கை வங்கி – ஹைட்பார்க் கோனர் கிளை - சேமிப்புக் கணக்கு இல. 2327550	51,939,410)	(27,868,543)
மக்கள் வங்கி – முதற்தர கிளை - கணக்கு இல. 933	(45,118,812)	(30,867,519)
சேமிப்புக் கணக்கு - ஹைட்பார்க் கோனர் கிளை	184,500	
மாற்றப்படுகின்ற காசோலைகள் - தலைமை அலுவலகம்	14,500	
மொத்தம்	**(91,085,856)**	**(51,039,002)**

`31.12.2011 முடிவடைந்த ஆண்டுக்கான ஒப்புரவு மாற்றங்கள் கூற்று

குறிப்பு -10

	மூலதன ஒதுக்கு	அரசாங்க பங்களிப்பு	கொடைகள்	இலாபம்.'.(குறைப்பு)
31.12.2011 நிலுவை சீராக்கம்	142,051,688	395,987,977	1,571,137,549 (1,571,137,549)	(2,399,016,154) 1,571,137,549)
மொத்தம்	**142,051,688**	**395,987,977**		**(827,878,605)**
மு.கொ. நிலுவை ஆண்டுக்கான இலாபம் தலைமை அலுவலகம் முன் பெருந்தோட்ட இழப்பு	142,051,688	395,987,977		(827,878,605) (52,413,476)
31.12.2011 உள்ளவாறான நிலுவை	**142,051,688**	**395,987,977**	-	**(880,292,080)**

2011 டிசம்பர் 31இல் உள்ளவாறான பெருந்தோட்டங்களின் ஐந்தொகைக்கான குறிப்புகள்

	2011 (ரூபா)	2010 (ரூபா)
குறிப்பு – 11		
நிறுத்திவைக்கப்பட்ட பொறுப்புக்கள்		
பணிக்கொடை ஏற்பாடுகள் - தோட்டங்களின் கணக்கு	378,215,636	269,164,378
பணிக்கொடை ஏற்பாடுகள் - தலைமை அலுவலக கணக்கு	8,018,411	6,170,155
செலுத்தப்பட்ட மற்றும் தீர்க்கப்பட்ட பணிக்கொடை	(61,319,271)	(80,571,861)
	324,914,776	**194,762,672**

குறிப்பு - 12

கடன் கொடுத்தோர்

நானாவித கடன் கொடுத்தோர் - பெருந்தோட்டங்கள் மற்றும் தலைமை அலுவலக கணக்கு	46,004,480	32,418,890
தரகர்கள் கணக்கு	56,696,553	75,698,253
செலுத்த வேண்டிய தேயிலைக்கான கேள்வி வைப்புக்கள்	6,846,577	5,762,303
உறுதிப்படுத்தப்படாத சார்த்துதல்கள்	58,556	1,370,310
பெருந்தோட்டங்களின் நடைமுறைக் கணக்குகள்	8,152,941	7,869,111
ஜனவசம நடைமுறைக் கணக்கு	107,709,342	108,509,342
பர்த் பெருந்தோட்டக் கணக்கு	26,373,168	26,373,168

உறுதிப்படுத்தப்படாத பட்டியல்கள்	967,451	
பீபல்ஸ் லீசிங் கம்பனி	204,290	514,339
பீபல்ஸ் மர்சன்ட் கம்பனி	3,687,500	5,310,000
உரக் கூட்டுத்தாபனம்	35,931,679	40,214,434
முற்பணக் குத்தகை – ஓபல்கல்ல	4,480,000	4,480,00
பொலி செமிக்ஸ்	4,800,000	
எல்கடுவ பெருந்தோட்டம்	172,137	172,137
மக்கள் வங்கிக் கடன் கணக்கு	1,286,62	9,006,358
சிலாபம் பெருந்தோட்டம்	20,000,000	20,000,000
சென்ட்றல் பினேன்ஸ் கம்பனி		3,225,941
உடுபுஸ்ஸல்லாவ பெருந்தோட்டம்		2,500,000
பிராந்திய அலுவலக கணக்கு		40,262,039
மரங்களுக்கான முற்பணம்	16,826,000	
மொத்தம்	**340,197,298**	**383,686,625**

அட்டுறு மற்றும் செலுத்த வேண்டியவை		
கணக்காய்வுக் கட்டண ஏற்பாடு	2,551,884	2,024,850
ஊ.சே.நி. - பெருந்தோட்டங்கள்	370,250,385	316,852,477
ஊ.ந.நி.	19,932,218	9,329,007
செலுத்த வேண்டிய வரி		693
செலுத்த வேண்டியுள்ள வருகைக்கான மிகையூதியம்	2,767,773	
அட்டுறு செலவினம்	2,655,701	2,372,897
காசு கொண்டு செல்வதற்கான காப்புறுதி	728,674	
செலுத்த வேண்டிய ESPS	2,546,682	787,472
செலுத்த வேண்டிய CPPS	711,442	342,680
செலுத்த வேண்டிய சம்பள குறைப்புகள்	75,534	52,443
நலன்புரிச் சங்கங்கள்	1,102	29,547
பதவியணியினர் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டியவை	55,566,640	48,284,790
தொழில் சங்கங்கள்	1,619,348	794,635
செலுத்த வேண்டிய பணிக்கொடை	166,384,256	103,247,314
செலுத்த வேண்டிய வைத்திய செலவினங்கள்	229,225	
மொத்தம்	**626,020,865**	**484,118,805**
முழு மொத்தம்	**966,218,163**	**867,805,430**

2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான
வருமானக் கூற்றுக்கான (பெருந்தோட்ட) குறிப்புகள்

	2011 (ரூபா)	2010 (ரூபா)
குறிப்பு – 13		
விற்பனை வருமானம் - தேயிலை		
தேறிய தேயிலை விற்பனை - கொழும்பு ஏலவிற்பனை மொத்தம்	428,042,279	499,907,752
பெருந்தோட்டங்களில் தேயிலை விற்பனை	8,090,510	
ஆரம்ப இருப்பிலிருந்தான தேயிலை விற்பனை	56,218,138	
நிராகரிக்கப்பட்ட தேயிலை	774,499	1,583,650
மொத்தம்	**493,125,426**	**501,491,402**
குறிப்பு - 14		
விற்பனை வருமானம் - சிறு பயிர்ச் செய்கைகள்		
ஏலக்காய் விற்பனை	2,237,000	794,821
கிராம்பு விற்பனை	1,916,137	3,287,649
மிளகு விற்பனை	(2,900)	111,634
கோப்பி விற்பனை	(29,290)	(113,997)
சாதிக்காய் விற்பனை	2,272	(138,541)
மொத்தம்	**4,123,219**	**3,941,566**
குறிப்பு - 15		
வருமானம் - தோட்டங்கள்		
மரங்களின் கேள்வி நடைமுறைகள்	132,098,711	37,530,860
வலஹந்துவை தேறிய இலாபம்	16,560,055	8,259,799
மேலதிக விடயங்களின் விற்பனை	13,030,946	
நானாவித வருமானங்கள்	7,586,952	31,890,763
பெறுமதிசேர்வரி மிகை ஏற்பாடு		1,119,931
கம்மடுவ பெருந்தோட்டம்	-	-
குத்தகை வாடகை வருமானம்	21,922,054	31,232,849
திருப்பிச் செலுத்தப்படாத கேள்வி வருமானம்	2,400,000	261,874
கிடைத்த பதிவுக் கட்டணம்	868,200	271,400
முகாமைத்துவ வருமானம்	23,353,728	16,241,819
மிகைத்துக் குறிப்பிடப்பட்ட தடுத்துவைத்தல்கள்		7,005,627
பணிக்கொடை மிகை ஏற்பாடு		21,716,090
மேற்பார்வைக் கட்டணம்		145,715
வி.பி. செடிகளின் விற்பனை	171,089	384,963
மொத்தம்	**217,991,734**	**156,061,689**

2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுக்கான (தோட்டங்கள்) குறிப்புகள்

	2011 (ரூபா)	2010 (ரூபா)
குறிப்பு - 16		
ஆளுக்குரிய செலவினம்		
தலைவரின் வேதனாதிகள்	774,365	435,806
பணிப்பாளர்களும், சபை உறுப்பினர்களும்	309,500	432,500
தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் சம்பளம்	20,273,323	18,896,085
கொடுப்பனவுகள்	34,371	43,125
வருகைக்கான மிகையூதியம்		49,350
C.P.P.S. பங்களிப்பு 12%	517,055	103,958
ஊ.சே.நி. பங்களிப்பு 12%	536,974	518,738
E.S.P.S. பங்களிப்பு 12%	816,168	764,118
ஊ.ந..நி. பங்களிப்பு 3%	491,528	482,057
ஆண்டுக்கான பணிக்கொடை ஏற்பாடு	2,686,334	883,867
மேலதிக நேரக் கொடுப்பனவு	347,558	349,691
மொத்தம்	**26,787,175**	**22,959,294**
குறிப்பு – 17		
நிருவாகச் செலவினம்		
விளம்பரம்	323,318	370,834
கணக்காய்வுக் கட்டணம்	135,490	164,535
பதிவுக் கட்டணம்	687,013	40,680
நன்கொடை	390,464	422,500
மின்சாரம்	432,840	478,150
களியாட்டங்கள்	201,072	194,918
நிறைவேற்றுப் பதவியணிக்கான மருத்துவக் காப்புறுதி	358,711	195,863
நிறைவேற்றல்லாத பதவியணிக்கான மருத்துவக் காப்புறுதி	979,363	812,539
சட்டக் கட்டணங்கள்	2,863,941	1,749,843
மோட்டார் வாகனப் பராமரிப்பு	1,202,381	2,488,276
அலுவலக உபகரண பராமரிப்பு	146,022	257,096
அலுவலக பராமரிப்பு	38,469	177,697
விலை மதிப்புக் கட்டணம்	37,870	270,310
தபால் மற்றும் பொதிகள்	142,599	117,597
பிராந்திய அலுவலக செலவினம்		657,775
பதவியணியின் நலன்புரி - தேயிலை	435,045	84,167
முத்திரைத் தீர்வை	505,675	106,000
எழுதுகருவிகள்	573,768	463,386
நானாவித செலவினங்கள்	218,313	1,100,365
தொலைபேசிக் கட்டணம்	382,778	488,148
போக்குவரத்து, பிரயாணச் செலவினம்	551,453	373,379
வாகன குத்தகை வாடகை	13,692	250,645

நீர்ப் பட்டியில்	24,500	83,711
செயலமர்வும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும்		3,800
சுத்தம் செய்யும் சேவை	44,148	42,553
பெறுமானத் தேய்வு	1,105,000	2,690,412
ஊ.சே.நி. - மிகைக் கட்டணம்	5,185,092	3,855,065
அலுவலக வாடகை	2,651,100	550,000
பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டோர்	238,000	373,727
வரியும், தீர்வையும்	169,999	166,878
கல்பிஹில்ல விடுதிப் பராமரிப்பு	936,701	672,145
மோட். வாகன குத்தகை வட்டி	462,531	1,488,798
வங்கிக் கடன் வட்டி	73,481	1,544,602
பெறுமதிசேர்வரிக் கட்டணங்கள்	18,000	
நட்டஈடுகள்	133,549	
<u>பெருந்தோட்டங்களின் நிருவாகச் செலவினம்</u>		
எழுதுகருவியும், தொடர்பாடலும்	3,014,932	2,723,739
கணக்காய்வுக் கட்டணங்கள்	519,600	519,600
சட்டக் கட்டணம்	600,093	265,034
முகாமைத்துவக் கட்டணம்	23,008,395	15,890,666
பணிக்கொடை	19,842,293	19,397,930
களஞ்சிய வாடகை	2,418,088	2,430,477
நானாவித செலவினம்	2,417,052	
காப்புறுதி	26,863	5,146
கழிக்க - பொதுவான கட்டணங்கள் மிகை ஒதுக்கம்	(12,215,142)	(16,037,984)
மொத்தம்	**61,294,550**	**47,931,000**

குறிப்பு - 18

<u>நிதி – தோட்டங்கள்</u>

காசு மீதான தரகு	4,940,271	4,803,826
வரவு வரி	51,188	698,683
தரகர்களின் வட்டி	16,587,161	15,937,120
வங்கிக் கட்டணங்கள்	9,263,188	5,863,833
காசு கொண்டுசெல்லும் கட்டணங்கள்	30,632	19,556
மொத்தம்	**30,872,440**	**27,323,019**

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்
கணக்கீட்டுக் கொள்கைகள் - 2011

பொது

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் 1958 இன் 04 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ளது. 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் இணைந்த நிதிக் கூற்றுக்களில் பிரதான அலுவலகம், பிராந்திய பணிப்பாளர் அலுவலகம் - கண்டி – மற்றும் கூட்டுத்தாபனத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற 12 பெருந்தோட்டங்களின் செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

1. தகவல்கள்

1.1. பிரதான செயற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

தேயிலை, இறப்பர் மற்றும் சிறிய பயிர்ச் செய்கைகள், உற்பத்திகளை முகாமைத்துவம் செய்வது, இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் பிரதான பணியாகும். பெருந்தோட்டங்கள் தமது உற்பத்திகளை கொழும்பு ஏல விற்பனையில் விற்பனை செய்கின்றன.

1.2. நிதி ஆண்டு

கூட்டுத்தாபனத்தின் நிதி ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

1.3. பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 11, டியுக் வீதி, கொழும்பு – 01 இல் அமைந்துள்ளது.

1.4. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினரின் எண்ணிக்கை

தோட்டங்கள்=		தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்	
அத்தியட்சகர்	12	தலைவர்	01
உதவி அத்தியட்சகர்	18	நிறைவேற்றுப் பணிப்பாளர்	01
தொழில்சாலை மற்றும் அலுவலக பதவியணி	174	பணிப்பாளர் - நடவடிக்கை	01
பராமரிப்பு மற்றும் உதவிப் பதவியணியினர்	100	பொது முகாமையாளர்	01
		நடுத்தர மட்ட முகாமையாளர்கள்(FM)	01
		கனிஷ்ட முகாமையாளர்கள்	04
		முகாமைத்தவ உதவியாளர்கள்	30
		கீழ் மட்டங்களைச் சேர்ந்த தரம்	11
உபமொத்தம்	**304**		**50**

தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள மொத்தப் பதவியணியினரின் எண்ணிக்கை **354**

1.5. 2010 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான தோட்டங்களின் பதவியணியும், சனத்தொகையும்

ஆண்	1,895
பெண்	2,685
சனத்தொகை	28,930

1.5 காணிகளின் உள்ளடக்கம் பின்வருமாறு உள்ளது;

பயிர் செய்யப்பட்டுள்ள மொத்த ஹெக்டயார் அளவு VP தேயிலை	1,058.00	
- செடிகள்	2,539.35	3,597.35

இறப்பர்	10.00
மொத்த சிறிய பயிர்செய்கைகள்	1,701.32
தேயிலை நாற்றுமேடை	12.35
எரிபொருள் விறகுகள் / பலகை	1,313.97
காடு / கைவிடப்பட்டுள்ளவை / ஏனைய காணிகள்	3,184.24
மொத்தம்	**9,819.23**

2. விசேட முக்கியத்துவமிக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு;

2.1. நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் தயார் செய்யப்படுகின்றன.

2.2. ஐந்தொகை, வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் உரிமையாண்மையின் மாற்றங்கள் தயார் செய்யப்படுவது இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் தயார் செய்யப்பட்டு பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு நியமங்களுக்கு அமையவாகும்.

இந்தக் கணக்கீட்டுக் கூற்றுகளில் தாக்கம் செலுத்துகின்ற பணவீக்கக் காரணிக்கான சீராக்கல்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.3. இ.அர.பெ. கூட்டுத்தாபனம் இந்தக் கணக்கீட்டுக் கொள்கைகளை எல்லாச் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தியிருப்பதுடன், அவை கடந்த ஆண்டின் முறையியலுக்கு அமைவானதாகும். மீளாய்வு ஆண்டின் சமர்ப்பிப்புகளை உறுதிசெய்வதற்காக இ.அ.பெ. கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டின் தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்கள், சொற்றொடர்களை தேவையானவாறு மீளமைத்துள்ளது.

2.4. ஐந்தொகைத் திகதியின் பின்னர் ஏற்படுகின்ற சம்பவங்களின் பௌதீக நிலைமைகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன், தேவையானவாறு உரிய சீராக்கல்களும் செய்யப்பட்டுள்ளன.

2.5. குறித்த கணக்குகளின் சரியானதன்மை உறுதி செய்து கொள்ளப்பட்ட பின்னர், கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள முன்கொண்டுவந்த செயற்படாத மீதிகள் இணக்கம் செய்யப்பட்டுள்ளன. இப்பணிக்காக இணக்கம் செய்யப்படாத வரவு மீதிகளை முடிவுறுத்துவதற்காக பெருந்தோட்ட நிறுவன பதவியணி மற்றும் தலைமை அலுவலக பதவியணியினர் ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

3. நிலையான சொத்து மதிப்பீடு

3.1 நிலையான சொத்துக்கள் தொடர்பாக வரலாற்றுக் கிரய அடிப்படையிலான தேய்மானம் தற்போதைய தேய்மானத்துடன் ஒப்பிடப்பட்ட பின்னர் பதிவு செய்யப்படும்.

3.2 சொத்துக்களின் உத்தேச உபயோக ஆயுட்காலத்தை நிலையான சொத்துக்களின் செலவினம் பெறுமதியிலிருந்து பதிவழிப்புச் செய்வதற்காக தேய்மானமானது நேர்கோட்டு அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொள்வனவு செய்த ஆண்டில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

காணிகள் மற்றும் முதிர்ச்சியடையாத பயிர்செய்கைகளுக்கான தேய்மானம் கணிப்பிடப்படவில்லை. குறித்த விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.;

- கட்டடங்கள் 5%
- இயந்திர சாதனங்கள் 12.5%
- மோட்டார் வாகனம் 25%
- பொறித்தொகுதி 12.5%
- தளபாடமும் பொருத்தல்களும் 12.5%
- முதிர்ச்சியடைந்த பெருந்தோட்டம் 3%
- கணனி மென்பொருள் 33%

3.3 தெமட்டகொடை காணியின் பெறுமதி அரசாங்க மதிப்பீட்டாளரினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் தற்போதைய ஆண்டின் காணி மதிப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த காணி பெறுமதி மீதான அதிகரிக்கப்பட்ட தொகை பற்றாக்குறை கணக்கின் முன்கொண்டுவரப்பட்ட நிலுவைக்கக்கு எதிராக பதியப்பட்டிருக்கின்றது.

4. நடைமுறைச் சொத்துக்கள்

4.1 பொருட்பதிவேடு

கொழும்பு ஏலத்தில் விடும் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் மற்றும் விற்பனை செய்யப்படாத முடிவுப்பொருட்கள் இ.அ.பெ. கூட்டுத்தாபனத்தின் பொருட்பதிவேட்டில் உள்ளடங்குகின்றன. இ.க.நியமம் 32 இற்கமைய சந்தையில் விற்பனை செய்த அளவின் அடிப்படையில் இருப்பு விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

4.2 இருப்பு – உள்ளீடு மற்றும் நுகர்வுப் பொருட்கள்

ஆண்டின் இறுதியில் பௌதீக உறுதிப்படுத்தல்கள், முதலில் உள்வருவது, முதலில் வெளியேறுவதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு களஞ்சியங்களில் உள்ள இருப்புப் பதிவேடுகளின் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.4. கடன்பட்டோர், வைப்புக்கள் மற்றும் அறவிடப்பட வேண்டிய தொகைகள்கடன்பட்டோர்

அறவிட முடியாக் கடனாக இனங்காணப்பட்டுள்ள சிறிய கடன்பட்டோர் அத்தொகைகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். மீளாய்வு ஆண்டில் எந்தவொரு அறவிட முடியாக் கடனும் பதிவழிப்புச் செய்யப்படவில்லை.

4.5 காசும், காசுக்குச் சமமானவையும்.

காசும், காசுக்குச் சமமானவைகளுமாக, சேமிப்புக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட்டுள்ள தொகைகள், இடைமாற்றல் தொகைகள் மற்றும் வங்கியிலுள்ள காசாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5. பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

5.1 நிறுத்தி வைக்கப்பட்ட பொறுப்புக்கள்

ஓய்வு பெறுகின்ற ஊழியர்களுக்கான பணிக்கொடைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1982 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்கின்ற சகல ஊழியர்களுக்கும் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

5.2 வியாபார மற்றும் வேறு செலுத்த வேண்டிய தொகைகள்

பௌதீக மற்றும் ஐந்தொகைத் திகதிக்கு விசேட முக்கியத்துவத்தைக் கொண்டுள்ள வியாபார மற்றும் வேறு செலுத்த வேண்டிய தொகைகள், கணக்குகளில் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. பொறுப்புக்களுக்காக போதியளவு ஏற்பாடுகள் ஒன்றுசேர்க்கப்படுகின்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

6. வருமானக் கூற்று

6.1 வருமானம்

6.1.1. வருமானத்தை இனங்காணல்

வருமானமானது திரட்டப்படுவதன் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது. 2011 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சேவைகள் ஊடாக பெற்றுக் கொண்ட வருமானம் மேற்படி ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது.

6.1.2. வியாபார வருமானம் - தேயிலை

கொழும்புத் தேயிலை ஏல விற்பனை மூலம், தேயிலை தோட்டங்களிலிருந்து விற்பனை செய்யப்பட்ட தேயிலை மூலமும், தேயிலை நிலையங்களிலிருந்து விற்பனை செய்யப்படுகின்ற தேயிலை மூலமும், பெருந்தோட்டங்களின் கழிவுத் தேயிலையாக விற்பனை செய்யப்படுகின்ற தேயிலை மூலமும் கிடைக்கின்ற வருமானம் மொத்தத் தேயிலை வருமானமாக கணிப்பிடப்பட்டுள்ளது.

6.1.3. சிறிய பயிர்ச்செய்கைகளின் மூலம் கிடைக்கும் வருமானம்

ஏலம், கராம்பு, மிளகு, கோப்பி போன்றன பெருந்தோட்டங்களில் பயிரிடப்படுகின்ற சிறியளவான பயிர்ச் செய்கை வகைகளாகும். விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கான ஊழியத்தின் செலவைக் குறைத்துக் கொள்வதற்காக பெருமளவான பகுதிகளை விற்பனை செய்கின்ற கேள்விநடைமுறை பின்பற்றப்படுகின்றது.

6.1.4. பலகை விற்பனை மூலமான வருமானம்

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் நாட்டப்பட்ட பலகைக்காகப் பெறக்கூடிய மரங்களை விற்பனை செய்வது கேள்வி நடைமுறை ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. 2011 டிசம்பர் மாதத்தில், அவ்வாண்டில் கேள்வி சமர்ப்பிப்பதன் மூலம் பெறப்பட்ட வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6.1.5. வேறு வருமானங்கள் - தலைமை அலுவலகம் மற்றும் பெருந்தோட்டங்கள்

குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் பெருந்தோட்டங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானம் திரட்டப்படுவதன் அடிப்படையில் தலைமை அலுவலகம் மற்றும் பெருந்தோட்டங்களின் வேறு வருமானமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

6.2. செலவினங்கள்

ஆண்டின் இலாபத்திற்காக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கின்ற வருமானத்தில் உற்பத்தி, நிருவாகம் மற்றும் சொத்துக்களின் பராமரிப்புக்கான சகல செலவினங்களும் அறவிடப்பட்டுள்ளன. ஒன்றுதிரட்டப்பட்ட சகல செலவினங்களும் அடுத்த ஆண்டின் மொத்த இலாபம் நட்டத்தைக் கணிப்பிடும் போது கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

My No:LS/G/SLSPC/FA/2011 Your No: Date : 27.March 2013

Chairman
Sri Lanka State Plantation Corporation

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்
1971 இன் 28 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (இ) பிரிவுக்கு அமைய 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவுக்கமைய 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற ஆண்டுக்கான இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க விவசாயக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற ஆண்டுக்கான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற ஆண்டுக்கான ஐந்தொகை மற்றும் அவ்வாறு நிறைவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுக்கள், பங்குகளில் உரிமையாண்மையின் மாற்றங்களைக் குறிப்பிடுகின்ற கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்று, விசேட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புரையாகியன எனது பணிப்புரையின் பேரில் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டன. நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவுக்கமைய கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் இதில் உள்ளடங்குகின்றன. நிதியதிகாரச்சட்டத்தின் 13 (7) (அ) பிரிவுக்கமைய தவிசாளரிடம் சமர்ப்பிக்க வேண்டிய விரிவான அறிக்கை 2012 ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக இடம்பெற்ற பௌதீக வெளிப்படுத்தல்களின்றி நிதிக்கூற்றுக்களைத் தயார் செய்வதற்குத் தேவையானதென முகாமைத்துவம் தீர்மானிக்கின்ற குறித்த உள்ளகக் கட்டுபாடுகளை மேற்கொள்வதும் இலங்கை கணக்கீட்டுக் கொள்கைகளுக்கமைய இந்த நிதிக்கூற்றுக்களைத் தயார்செய்து சமர்ப்பிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

1.3 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொறுப்பு

இலங்கைக் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கமைய கணக்காய்வுகளை மேற்கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்களைச் சமர்ப்பிப்பது எனது பொறுப்பாகும். கருத்துரையின் பொறுப்புக்களிலிருந்து விடுபடுவதற்கான அடிப்படை எனும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக கணக்காய்வுக் கருத்துரைக்கு அடிப்படையான

விடயங்களைச் சமர்ப்பிப்பதற்கான குறித்த தகவல்களை போதியளவில் பெற்றுக்கொள்ள எனக்கு முடியவில்லை.

1.4 கருத்துரையின் பொறுப்புக்களிலிருந்து விடுபடுவதற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.3.1 முதல் 2.3.6 வரையான பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக அறிக்கையிடப்பட்டுள்ள மற்றும் அறிக்கையிடப்படாத விடயங்கள், வருமானக் கூற்று, உரிமையாண்மையின் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றைத் தயார்செய்வது சம்பந்தமான அடிப்படை அம்சங்கள் தொடர்பில் ஏதேனும் இணக்கம் செய்யப்படுவது அவசியமாகவுள்ளதா என்பதை எனக்குத் தீர்மானிக்க முடியாது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 கருத்துரையின் பொறுப்பிலிருந்து விடுபடுதல்

இந்த அறிக்கையின் 2.3.1 முதல் 2.3.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வுக் கருத்தொன்றைச் சமர்ப்பிக்கத்தேவையான அடிப்படையைத் தயார்செய்து கொள்வதற்குக் காரணமாகின்ற பொருத்தமான கணக்காய்வுச் சான்றிதழ்களைப் போதியளவில் பெற்றுக்கொள்ள எனக்கு முடியவில்லை.

2.2 பெருந்தோட்ட நிறுவனங்களின் முகாமைத்துவத்தை மீள ஒழுங்கமைத்தல்

1992 ஜுன் மாதம் வரை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 6 பிராந்திய அலுவலகங்களுடன் இணைந்து 242 பெருந்தோட்டங்களை முகாமைத்துவம் செய்திருந்தது. 5 பிராந்திய அலுவலகங்களின் கீழ் காணப்பட்ட 209 தோட்டங்கள் 1992 ஜுன் மாதம் முதல் முகாமைத்துவப் பணிகளுக்காக 23 பெருந்தோட்ட நிறுவனங்களிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கத்திற்குரித்தான நிறுவனங்கள் அல்லது வியாபார நிறுவனங்களை பொதுக்கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டத்திற்கமைய 1993 ஜுலை மாதம் முதல் அவை தனியார்த்துறையிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாக எஞ்சியுள்ள 12 தோட்டங்களில் 6 தோட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. அவை பின்னர் 1999 ஆம் ஆண்டில் ஒரு தோட்டமும் 2002 நவம்பர் மாதம் ஒரு தோட்டமும் 2003 ஆம் ஆண்டில் குத்தகை அடிப்படையில் 2 தோட்டங்களாக அந்த தோட்டங்கள் தனியார்த்துறைக்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு மற்றும் தனியார்த்துறையிடம் பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. தனியாத்துறைக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்து ஒரு தோட்டம் 2004 ஒக்டோபர் மாதம் கூட்டுத்தாபனத்தால் மீளக்கையேற்கப்பட்டது. அதற்கமைய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக 12 தோட்டங்களை (கல்பிஹில்ல பிராந்திய அலுவலகத்துடன்) 2011 ஆம் ஆண்டின் இறுதிவரை நிருவகித்து வந்துள்ளது.

2.3 நிதிக்கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுங்கு இணங்கிச்செல்லாமை

இலங்கை கண்கீட்டு நியமத்துடனான தொடர்பு	**விபரம்**
(அ) இலங்கை கண்கீட்டு தராதரங்கள்	பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் ஒரு ஊழியர் சேவையில் இணைந்து கொண்ட

	ஆண்டு முதல் ஒதுக்கப்பட வேண்டுமாயினும் தலைமை அலுவலகம் அல்லாத ஏனைய ஊழியர்களுக்கு அவ்வாறு பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கப்பட்டிருப்பது ஐந்து வருடங்கள் சேவையை நிறைவுசெய்துள்ள ஊழியர்களுக்கு மாத்திரமாகும்.
(ஆ) இலங்கை கணக்கீட்டு தராதர இலக்கம் 18	(i) ஆதனங்களை மீள் மதிப்பீடுகளைத் தயார்செய்யும் போது ஆதனங்களின் பெறுமதி உயர்ந்திருந்தால் அவ்வாறு அதிகரித்துள்ள பெறுமதி உரிமையாண்மையாக மீள் மதிப்பீட்டுக் குழுமத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். எவ்வாறாயினும் தெமட்டக்கொடையில் அமைந்துள்ள காணி, கட்டிடங்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியின் மிகையான ரூபா. 147,613,495 ஆன தொகை இலாப நட்ட ஒதுக்கீட்டுக் கணக்கிற்குச் செலவளிக்கப்பட்டிருந்தது. (ii) யாதாயினும் ஒரு விடயத்தை மீள் மதிப்பீடு செய்யும் போது குறித்த மொத்த ஆதனங்களையும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டுமாயினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. (iii) பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடுகள் ஒரு சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்யப்படும் ஆண்டை அடிப்படையாகக் கொண்டும் மற்றொரு சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்த ஆண்டை அடுத்து வரும் ஆண்டை அடிப்படையாகக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய ஆதனங்களின் பெறுமானத்தேய்வைக் கணிப்பிடும் போது நிறுவனம் ஒரே சமமான கொள்கையைப் பின்பற்றியிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.
(ஆ) இலங்கை கணக்கீட்டு தராதர இலக்கம் 24	அரசாங்க கொடைகளைக் கணக்குகளில் பதிவுசெய்வதற்காக நிறுவனம் பின்பற்றி வந்துள்ள கணக்கீட்டு முறையியல் மற்றும் இறுதிக்கணக்குகளில் அந்தக் கொடைகளின் மீதிகளை குறிப்பிடுகின்ற முறை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வு ஆண்டில் தலைமை அலுவலகத்தின் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் கணிப்பிடப்பட்டிருப்பது ரூபா. 500,000 ஆல் மிகைப்படுத்தியாகும்.

(ஆ) இலாப நட்டக் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டிய ரூபா. 82,275,798 ஆன மற்றும் ரூபா. 4,473,846 ஆன பெறுமதியைக் கொண்ட பெருந்தோட்ட ஊழியர்களின் சம்பள அதிகரிப்பினடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ள மீளாய்வு ஆண்டின் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மற்றும் பணிக்கொடைக்கான தொங்கல் கணக்கிற்கும் பணிக்கொடைக்கான கணக்கிற்கும் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா. 162,847,658 ஆன பெறுமதியைக் கொண்ட பணிக்கொடை தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா.8,826,845 ஆன பெறுமதியைக் கொண்ட பணிக்கொடைக் கணக்கிற்கான ஏற்பாடுகளின் வரவு மீதி பணிக்கொடைக்குரிய கொடுப்பனவாக ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) பெருந்தோட்டங்களின் மொத்த ஆரம்ப மீதிகளின் மற்றும் தலைமை அலுவலகத்தின் முறையே ரூபா. 384,385,791 மற்றும் ரூபா. 92,249,239 ஆன பெறுமதியைக் கொண்ட மாற்றங்கள் அவதானிக்கப்பட்டதுடன் பணிக்கொடையின் கூட்டாக ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டிருந்தது,

(உ) வலஹந்துவ பெருந்தோட்டப் பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 22,636,795 மொத்தப் பெறுமதியைக் கொண்ட ஆதனங்கள் மற்றும் ரூபா. 5,921,740 முழுப் பெறுமதியைக் கொண்ட பொறுப்புக்களும் கூட்டான இறுதிக்கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா. 2,412,333,999 ஆன பெறுமதியைக் கொண்ட முன்னைய ஆண்டின் இலாப நட்ட ஒதுக்கீட்டுக்கணக்கின் இறுதி மீதி மீளாய்வு ஆண்டின் ஆரம்ப மீதியாக முன்கொண்டுவரப்பட வேண்டுமாயினும் இந்த மீதி ரூபா. 2,471,366,560 என முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(எ) சேதமடைந்த வாகனங்கள், பழைய தொழிற்சாலைகள் மற்றும் இயந்திர சாதனங்களை விற்பனை செய்ததன் மூலம் மீளாய்வு ஆண்டில் ரூபா. 13,030,946 ஆன தொகை உழைக்கப்பட்டிருந்தது. இந்த ஆதனங்களின் செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடுகள் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டு மிகையை இணக்கம் செய்வதற்கு அல்லது கணக்குகளின் நிலுவையாக வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஏ) கூட்டுத்தாபனத்தினால் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டிருந்த நிரந்தர வைப்புகளிலிருந்து மீளாய்வு ஆண்டில் வட்டியாக கிடைக்க வேண்டிய ரூபா. 250,000 ஆன தொகை வங்கிகளிலிருந்து பெறப்பட்ட கடனுக்காக செலுத்த வேண்டிய ரூபா. 914,006 ஆன தொகையை ஈடு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டு அந்தக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வு ஆண்டில் நிலையான வைப்புகளிலிருந்து கிடைக்க வேண்டிய வட்டியான ரூபா. 1,194,471 ஆன தொகைக் கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை என்பதுடன் நிலையான வைப்புகளின் வட்டியாக கிடைத்திருந்த ரூபா. 35,000,000 ஆன தொகை கணிப்பிடப்பட்டோ அல்லது குறிப்பிடப்பட்டோ இருக்கவில்லை.

(ஒ) மீளாய்வு ஆண்டின் இலாப நட்டக் கணக்கின் வரவு மீதி ரூபா. 74,752,248 இனால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ஓ) சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டிருந்த ரூபா. 20 மில்லியன் கடனுக்கான வட்டியாக 2011 டிசம்பர் 31 ஆம் திகதிக்குச் செலுத்த வேண்டிய ரூபா. 2,000,000 ஆன தொகை கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஔ) கொடைகளின் பெறுமதிகளின் மீதி மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலாபம் தனித்தனியாக ஐந்தொகையில் குறிப்பிடப்பட வேண்டுமாயினும் அந்த பெறுமதிகள் இரண்டினதும் பெறுமதியான ரூபா. 880,292,080 உரிமையாண்மைக் கணக்கின் மாற்றமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

2.3.3. இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 11 பெருந்தோட்டங்களின் 11 பேரீட்டுக் கணக்குகளின் ஆரம்ப மீதிகள் முன்னைய ஆண்டின் இறுதி மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், வித்தியாசத்தின் மொத்தப் பெறுமதி ரூபா. 30,744, 571 ஆகும்.

(ஆ) தலைமை அலுவலகம் மற்றும் 11 பெருந்தோட்டங்களின் செயற்படாத 34 கணக்குகளின் வரவு மீதிகளும் 15 கணக்குகளின் செலவு மீதிகளும் முறையே ரூபா. 48,142,268 மற்றும் ரூபா. 20,484,471 ஆன பெறுமதிகளைக் கொண்ட தொகைகள் பல வருடங்களாக தொடர்ந்து காணப்பட்டு வருகின்றன.

2.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) ரூபா. 66,725,225 ஆன பெறுமதியைக் கொண்ட கடன் பட்டோர் மீதிகளில் ஒரு வருடம் முதல் ஐந்து வருடம் வரையான காலங்களாகச் செலுத்த வேண்டியிருக்கின்ற ரூபா. 15,689,806 ஆன பெறுமதியைக் கொண்ட கடன் மீதிகளும் ஐந்து வருடங்களுக்கும் அதிக காலமாக செலுத்த வேண்டியுள்ள கடன் மீதியான ரூபா. 16,534,334 ஆன தொகையும் உள்ளடங்குகின்றது. இந்தக் கடன் மீதிகள் தொடர்பான கடன் பட்டோரின் ஆவணப்பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை முதலீட்டுச் சபை குறித்தான பேத் பெருந்தோட்டத்தின் நடைமுறைக்கணக்கின் வரவு மீதியாக ரூபா. 16,321,251 ஆன தொகையும் நிலையான வைப்பாக ரூபா. 22,252,590 ஆன தொகையும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான மீதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா. 243,990,129 ஆன பெறுமதியைக் கொண்ட கடன் கொடுத்தோர் மீதிகள் மற்றும் முறையே ரூபா. 2010,765,766 மற்றும் ரூபா. 5,014,528 ஆன ஒரு வருடம் முதல் ஐந்து வருடம் வரையான காலப்பகுதிகளில் காணப்பட்டு வருகின்ற மற்றும் ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாகக் காணப்பட்டு வருகின்ற கடன் கொடுத்தோர் மீதிகளின் பெறுமதிகளுக்கான மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

2.3.5 கணக்காய்வுக்கான சான்றுகள் போதியளவில் இல்லாமை

நிதிசர் கூற்றுக்களில் காணப்படும் பின்வரும் விடயங்கள் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் இன்மை காரணமாக கணக்ககளில் திருப்திகராமாக பதிப்படமுடியவில்லை

விடயம்	கணக்குகளின் எண்ணிக்கை	பெறுமதி	கிடைக்காத சான்றுகள்
நிலையான சொத்துக்கள்	-	834,076,373	உரியவாறு பேணிவரப்படாத நிலையான சொத்துப் பதிவேடு
தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் - தலைமை அலுவலகம்	-	1,105,000	தேய்மானம் கணிப்பிடப்படுகின்ற அட்டவணை
நிலையானவையும் ஏனையவையும்	03	126,253,215	வைப்புகள் பற்றிய பதிவேறுகள்
கடன்பட்டோர்	12	103,894,993	கடன்பட்டோர் பதிவேடுகளும் பரீட்சை மீதியும்
கடன் கொடுத்தோர்	14	308,345,309	கடன் கொடுத்தோர் பதிவேறும் பரீட்சை மீதியும்.

2.3.6 சட்டங்கள் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்புடையதாகாமை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்புடையதாகாத அல்லது இணங்கியொழுகாத அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு	ஏற்புடையதாகாமை / இணங்காமை
(அ) சட்டங்கள்	
(i) 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு	ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் அந்த ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை வரைவு செய்யப்பட்டு அதன் பிரதி நான்கு மாதங்களுக்குள் குறித்த விடயப் பொறுப்பு அமைச்சர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படவேண்டுமாயினும், அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை..
(ii) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்சட்டம்	ஒவ்வொரு மாதத்திற்கும் குறித்த ஊழியர்களுக்கான சேமலாப நிதியம் அதனை அடுத்து வரும் மாதத்தின் 30 ஆம் திகதிக்கு முன்னர் மாற்றப்பட வேண்டுமாயினும், 12 தோட்டங்கள்

	தொடர்பில் ரூபா. 370,250,375 பெறுமதிமிக்க பங்களிப்புத் தொகை அவ்வாறு மாற்றப்பட்டிருக்கவில்லை.
(iii) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைகளைச் செலுத்தும் சட்டம்	சேவை நிறைவடைந்த பின்னர் 30 நாட்களுக்குள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டுமாயினும், 12 தோட்டங்கள் சம்பந்தமான ரூபா. 166,384,256 பெறுமதி மிக்க பணிக்கொடைகள் அவ்வாறு செலுத்தப்பட்டிருக்கவில்லை.
(ஆ) இலங்கை அரச நிதியொழுங்கு விதிகள்.	
(i) நி.பி. 135 மற்றும் 135 (5)	நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவலருக்கு அவர்களின் கடமைகளை எழுத்து மூலம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் சில அலுவலர்களுக்கு வாய் மூலம் கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் அவர்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கு கைச்சாத்திடாதுள்ள சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.
(ii) நி.பி. 171 (2) (அ) மற்றும் (இ)	பதவியணி அங்கத்தவர்கள் அல்லாத ஆட்களுக்கு முறையற்ற கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.
(iii) நி.பி. 272 (ஆ) மற்றும் (இ)	ரூபா. 20,000 இற்கும் அதிகமான பெறுமதியைக் கொண்ட முற்பணங்கள் செலுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் அவற்றைத் தீர்ப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(iv) நி.பி. 386	காசோலைகள் வரைஞரின் கணக்கிற்கு மாத்திரம் எழுதப்படவேண்டுமாயினும், ரூபா. 100,000 பெறுமதிமிக்க காசோலைகள் காசு அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன.
(v) நி.பி. 1645	வாகனப் பதிவேறு மற்றும் நாளாந்த பயணக் குறிப்புகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.
(vi) நி.பி. 1646	மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்பு மற்றும் நாளாந்த பயணக் குறிப்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்ட்டிருக்கவில்லை என்பதுடன் வாகனங்களின் விபரங்களை உள்ளடக்குகின்ற குறிப்புகளும் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை அரசத்தின் தாபன விதிக்கோவை	
(i) VIII ஆம் அத்தியாத்தின் 10.1 (அ) பிரிவு	8 மணித்தியாலயத்திற்குக் குறைவான காலப்பகுதியில் சேவையாற்றிய பின்னர் 1/20 எனும் கொடுப்பனவு பெறப்பட்டிருந்தது.
(ii) VIII ஆம் அத்தியாத்தின் 10.3 ஆம் பிரிவு மற்றும் 1997 மே மாதம் 23 ஆம் திகதிய 118 (அ) ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை	1/20 கொடுப்பனவு ஒரு மாதத்திற்கு ஒரு நாளைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டுமாயினும், அலுவலர்கள் இரண்டு பேருக்கு ஒரு மாதத்தில் ஒரு நாளையும் விட அதிகமான நாட்களின் எண்ணிக்கைக்கு அந்தக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. அதற்காகா ரூபா. 31,682 செலவிடப்பட்டிருந்தது.
(ஈ) சுற்றறிக்கைகள்	
(i) 2003 ஜுன் 2ஆம் திகதிய பீ.ஈ.டீ. 2 ஆம் இலக்க பொதுத்தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை.	சுற்றறிக்கைக்கு முரணாக ஒரு பணிப்பாளரின் வியாபார நிறுவனமொன்றின் தொலைபேசிப் பட்டியலைச் செலுத்துவதற்காக ரூபா. 60,000 செலுத்தப்பட்டிருந்தது.
(ii) 2006 வழங்கல் வழிகாட்டல்	சுற்றறிக்கைகள் மற்றும் வழங்கல் வழிகாட்டல்களுக்கு முரணாக பெருந்தோட்டங்களில் காணப்பட்ட பெறுமதிமிக்க மரங்கள் தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் உள்ளன.

3. நிதி சார் மீளாய்வு

3.1 நிதி சார் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கமைய 2001 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற ஆண்டின் கூட்டுத்தாபன நடவடிக்கைகளில் ரூபா. 52,413,476 எனும் பற்றாக்குறை காணப்படுவதுடன், கடந்த ஆண்டில் இந்தப் பற்றாக்குறை ரூபா. 174,680 ஆகும். அதற்கமைய கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது கூட்டுத்தாபனத்தின் பற்றாக்குறை ரூபா. 38,238,796 இனால் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டின் மொத்த வருமான அதிகரிப்பான 10 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வு ஆண்டில் ஒட்டுமொத்த வருமானத்தின் அதிகரிப்பு 5 சதவீதமாகவிருப்பது இந்த நிலைமைக்கு காரணமாகக் குறிப்பிடப்படலாம்.

3.2 பகுப்பாய்வு சார் நித மீளாய்வு

(அ) நிதிப்பெறுபேறுகள்

	2011 ரூபா. '000	2010 ரூபா.'000	அதிகரிப்பு (குறைவு) விகிதம் %
வருமானம்			
முடிவுப்பொருளான தேயிலை	493,125	501,491	(2)
வேறு வருமானங்கள்	276,674	231,225	20

மொத்த வருமானம்	769,799	732,716	5
செலவினங்கள்			
உற்பத்திச் செலவினம்	703,258	648,678	8
வேறு செலவினம்	118,954	98,213	21
மொத்தச் செலவினம்	822,212	746,213	10
தேறிய நட்டம்	(52,413)	(14,175)	10
தேறிய நட்டத்தின் உப விகிதம்	(6.81)	(1.93)	

(ஆ) நிதி சார் நிலைமை

நடைமுறையல்லாத சொத்துக்கள்	703,494	553,051	27
நடைமுறைச் சொத்துக்கள்	264,465	306,431	(13)
நடைமுறைப் பொறுப்புக்கள்	966,218	867,805	11
செயற்படும் மூலதனம்	(701,753)	(561,374)	25
நீண்ட காலப் பொறுப்புகள்	344, 993	318,088	8
மூலதனமும் சேர்மமும்	(342,252)	(326,411)	5
தற்போதைய விகிதம்	1:4	1:3	
துரித சொத்து விகிதம்	1:5	1:4	

3.3 மூலதனப் பற்றாக்குறை

2010 ஆம் ஆண்டின் தேறிய சொத்துக்களின் மறைப் பெறுமதி ரூபா. 236,411 ஆகுமென்பதுடன், 2011 ஆம் ஆண்டில் இந்த மறைப் பெறுமதி ரூபா. 342,252,000 வரை வளர்ச்சியடைந்துள்ளது.

3.4 செயற்படு மூலதன முகாமைத்துவம்

2010 ஆம் ஆண்டில் ரூபா. 561,374 ஆகவிருந்த செயற்படு மூலதனப் பற்றாக்குறை 2010 ஆம் ஆண்டில் ரூபா. 700,753 ஆக அதிகரித்துள்ளது. இந்த திருப்தியற்ற நிலைமையைத் தவிர்த்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கையை முகாமைத்துவம் மேற்கொண்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் மொத்த தேயிலை உற்பத்தி 47,950 கி.கி. ஆல் அதிகரித்துள்ள போதிலும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறன் நீண்டகாலமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான 12 பெருந்தோட்டங்களிலும் ஒரு ஹெக்டயர்களுக்கான வருடாந்த தேயிலை உற்பத்தி சராசரி 688 கி.கி. ஆகும். மாத்தளை மற்றும் கண்டி பிரதேசங்களில் உயர் தரத்தைக் கொண்ட தேயிலையின் உற்பத்திச் சராசரி சுமார் 1000 கி.கி. ஆகும். எவ்வாறாயினும், உத்தேச தர நியமங்களைக் கொண்ட தேயிலை

உற்பத்தியானது கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஒரு பெருந்தோட்டத்திலிருந்து மாத்திரமே பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(இ) ஒரு கி.கி. தேயிலைக்கான பங்களிப்பு திருப்திகரமான மட்டத்திலிருக்கவில்லை. ஒரு கி.கி. தேயிலையை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலும் பார்க்க அதிகமான தொகை ஒரு கி.கி. தேயிலையை உற்பத்தி செய்வதற்காக தற்போது செலவிட வேண்டியேற்பட்டுள்ளமை நீண்ட காலமாக நிலவி வரக்கூடியதொரு போக்காகவுள்ளது.

4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.
(அ) கடன் பெற்றுக்கொள்ளும் போது செய்து கொள்ளப்படுகின்ற உடன்படிக்கைகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை காரணமாக எதிர்காலத்தில் எதிர்பாராத வகையில் நிதி வெளியே பாயக்கூடிய வாய்ப்பு உள்ளது.

(ஆ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பதிவேடுகளைப் பேணி வருவது மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(இ) வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்வதற்கான இலக்குகளை நிர்ணயிப்பதற்கு நல்லதொரு கடந்த கால அனுபவங்களை அடிப்படையாக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) ஊழியர்களுக்கான பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான மிகைக் கட்டணங்களுக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அன்பளிப்புகள் செய்வது தொடர்பாக செலுத்தப்பட்டுள்ள ரூபா. 150,000 பெறுமதிமிக்க காசோலையின் காபன் பிரதி மற்றும் உரிய வேறு ஆவணங்கள் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அமைச்சுக்கு அவ்வாறான காசோலைகள் கிடைத்திருப்பதாக அறிக்கையிடப்படவில்லை.

(ஊ) முறையான மதிப்பீடுகளைச் செய்யாது மரங்களை வெட்டும் போது பின்பற்ற வேண்டிய உரிய முறையியல்களைப் பின்பற்றாது 558 மரங்களுக்காக ரூபா. 24,631,500 எனும் தொகை பெறப்பட்டிருந்தது.

(எ) பொருளாதார ரீதியாக இலாபகரமான காலப் பகுதி நிறைவடைந்திருந்த காணிகளில் காணப்பட்ட பயிர்ச்செய்கைகள் மொத்த மொத்த காணிகளின் அளவில் 73 சதவீதமாகும்.

(ஏ) காணிகளின் நிர்வாகம் தொடர்பில் கீழே குறிப்பிடப்படுகின்ற அவதானிப்புகள் செய்யப்படுகின்ற.

i. குத்தகை முறையின் கீழ் வழங்கப்பட்டிருந்த சில விடயங்கள் தொடர்பான தகவல்கள் நிறுவனத்திடம் இருக்கவில்லை.

ii. பெருந்தோட்ட நிறுவனங்களிலிருந்து ஆறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 2,071,000 ஆன தொகையை அறவிட்டுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iii. நிறுவனத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அல்லது குத்தகை முறையின் கீழ் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவை பரிசீலனை செய்யும் முறையியல் ஊடாக நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை.

iv. 11,915.08 ஹெக்டயர் அளவான காணிகள் நிறுவனத்தின் நிருவாகத்திற்கு வெளியேயுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றிலுள்ள சொத்துக்களுக்கான பொறுப்பாளர் யாவர் என்பதை இனங்காண முடியவில்லை.

v. நிறுவனத்தினால் குத்தகையின் கீழ் வழங்கப்பட்டிருந்த காணிகளின் பகுதிகளை குத்தகைக்குப் பெற்றுள்ளவர்கள் விற்பனை செய்துள்ள சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

vi. பேர்ன்சைட் - பேர்ன்டைல் விடுதி 1985 – 2011 வரையான காலப்பகுதிக்குள் விலைமதிப்பீட்டாளர் ஒருவரின் விலை மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளாது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு குத்தகைக்கு வழங்கப்பட்டமைக்கான காரமும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. பகிரங்க கேள்வி கோருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

vii. அரசாங்க விலை மதிப்பீட்டாளர் ஒருவரின் விலை மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளாது செயின்ட் ஹேலியர்ஸ் தொழிற்சாலை 1988 ஆம் ஆண்டில் ரூபா. 30,000 ஆன வருடாந்த வாடகையின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 10 வருடங்களின் பின்னர் அந்தத் தொழிற்சாலையின் சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. 1998 இல் குத்தகை உடன்படிக்கை நிறைவுசெய்யப்பட்டு 2003 ஆம் ஆண்டில் மீண்டும் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. விலை மதிப்பு அறிக்கைக்கு அமைய வருடாந்த குத்தகை ரூபா. 81,000 ஆகவுள்ள போதிலும் அதனைக் கவனத்திற்கொள்ளாது அதனை விடக் குறைவான தொகைக்கு மீண்டும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

viii. 2002 ஆம் ஆண்டில் ஹத்தளை தோட்டத்திலிருந்து 313 ஏக்கர்கள் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 408 ஏக்கர்கள் நிறுவனத்தின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு அதனை முறையாக முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ix. தொடர்பு சாதனக் கோபுரங்களைப் பொருத்துவதற்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த காணிகளிலிருந்து கிடைக்க வேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் அந்தக் குத்தகையாளர்கள் குத்தகை உடன்படிக்கைக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனரா என்பதைத் தேடிப்பார்ப்பதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

x. 2004 ஆம் ஆண்டில் வைத்தலாவை தோட்டம் 1,325,293 ஆன வருடாந்த வாடகையின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்தத் தொகையின் அளவில் 75 சதவீதத்தை தோட்டத்தின் பொறுப்புக்களைச் செலுத்தி முடிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. பொறுப்புக்களுக்காகச் செலுத்த வேண்டிய தொகையைத் தீர்மானிக்கத் தேவையான தகவல்கள் நிறுவனத்திடம் இருக்கவில்லை.

xi. பகிரங்க கேள்வி கோரல் அல்லது அரசாங்க விலை மதிப்பீட்டாளர் ஒருவரின் விலை மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளாது மாத்தளை ஓப்பல்கல்லை தோட்டத்தின் 138 ஹெக்டயர் அளவான பயிர்ச்செய்கைகள் ரூபா. 350,000 வருடாந்த வாடகைத் தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஐ) நிறுவனத்திற்கு உரித்ததான ஒரு வாகனத்தை வேறு நிறுவனத்தின் உபயோகத்திற்காக வழங்கியிருந்ததுடன், நிறுவனத்திற்கு உரித்தல்லாத வாகனம் ஒன்று நிறுவனத்தின் உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. வாகனப் பரிமாற்றம் சம்பந்தமாக இரண்டு நிறுவனங்களுக்கும் இடையே எழுத்து மூலமான உடன்படிக்கையொன்று இருக்கவில்லை.

(ஓ) சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகவும் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாதும் நிறுவனத்திற்கு உரித்தான இரண்டு வாகனங்களைப் புதுப்பிப்பதற்காக வழங்கியிருந்ததுடன், புதுப்பித்தல் கட்டணம் ரூபா. 400,000 ஐயும் தாண்டியுள்ளது.

(ஓ) ஆண்டின் ஆரம்பத்தில் செயற்படாத கணக்குகளில் ரூபா. 105,180,092 ஆன வரவு மீதி இருந்ததுடன் ஆண்டில் ரூபா. 103,247,048 ஆன பெறுமதி மிக்க கணக்கு மீதிகள் செலவு வைக்கப்பட்ட பின்னர் இறுதி மீதியாக ரூபா. 1,933,044 ஆகக் காணப்பட்டது. மீதியை இனங்கண்டு கணக்குகளில் அதனைச் சீராக்கம் செய்வதற்குப் பதிலாக இந்தக் கணக்குகளின் மீதிகள் செயற்படாத கணக்குகளின் மீதியாகப் பதிவளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்தச் செயற்பாடுகளுக்கு முறையான அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

4.3 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்கக் காணிகளை நீக்குவதற்கான முறையான கொள்கையைப் பின்பற்றி மற்றும் வெப்படைத்தன்மையின்றி கிரகறி வீதியில் அமைந்திருந்த தலைமை அலுவலகக் கட்டிடம் ரூபா. 243 மில்லியனுக்கு விற்பனை செய்யப்படுள்ளதுடன், இணங்கியிருந்த அந்தத் தொகையைச் செலுத்துவது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அளவு 11.9 மில்லியன் ரூபாவாகும்.

4.4 செயலிழந்துள்ள மற்றும் குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள்

கணக்காய்வுப் பரிசோதனைக்கமைய வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒரு விடயமாகவிருப்பது 4 பெருந்தோட்டங்களுக்கு உரித்தான 2 தொழிற்சாலைகள், 3 தோட்ட விடுதிகள், 35 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள், ஒரு தேயிலை காய்ச்சும் இயந்திரம் மற்றும் 3 மோட்டார் வாகனம் என்றவகையில் பாரியளவான சொத்துக்கள் எவ்விதத்திலும் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தன என்பது தெரியவந்துள்ளது.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வு ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்ட பயனற்ற கொடுக்கல் வாங்கல்களை கூட்டுத்தாபனம் மேற்கொண்டிருந்தது.

	ரூபா
தரகு முற்பணத்திற்கான வட்டி	16,587,161
அன்பளிப்பு	390,464
ஊ.சே.நி. செலுத்தத் தவறியமைக்கான மிகைக் கட்டணம்	5,185,092
கடன் வட்டி	987,487
சட்ட கட்டணங்கள்	2,863,941

4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பயன்படுத்த முடியாத தேயிலை இருப்புகளைச் சமர்ப்பிப்பதற்காக தாங்கிக் கொண்ட நட்டம் ரூபா. 7,814,578 ஆகும்.

5. வகைப் பொறுப்பும் நல்லாட்சியும்

5.1 கூட்டாண்மைத் திட்டம்

2009- 2013 வரையான காலப்பகுதிக்கு நிறுவனத் திட்டமொன்று தயார் செய்யப்பட்டிருந்த போதிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.2 செயல் திட்டம்

2011 ஆம் ஆண்டுக்கான செயல் ரீதியான திட்டம் தயார் செய்யபட்டுள்ள போதிலும் அது தயார் செய்யப்பட்டிருப்பது நிறுவனத் திட்டம் அல்லது வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைக் கவனத்திற்கொள்ளததாகும். அவ்வாறே செயல் ரீதியான திட்டத்தின் முன்னேற்றத்தைக் காலத்திற்குக் காலம் பரிசீலனை செய்வதற்கான முறையியலொன்றும் நிறுவுனத்திடம் இருக்கவில்லை.

5.3 கணக்காய்வுக் குழு

2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ள கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களின் எண்ணிக்கை 03 ஆகும்.

5.4 வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடு

செலவின வித்தியாசம் 12.5% - 15% வரையான மட்டங்களில் காணப்பட்டதுடன், வருமான வித்தியாசம் 10% – 62% வரையான அளவுகளில் காணப்பட்டது.

5.5ஆண்டு அறிக்கைகளை அவையில் சமர்ப்பித்தல்

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் அவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6.ஒழுங்கமைப்பும், கட்டுப்பாடும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் நிறுவனத் தலைவரது கவனத்திற்கு அடிக்கடி கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) முற்பணங்களைத் தீர்த்தல் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

(இ) காணிகள் மற்றும் ஆதனங்களை குத்தகைக்கு விடுதல்

(ஈ) கணக்கீடு.

இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் பற்றிய 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2.3.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடையதாகாமை.

(அ) கணக்காய்வு வினாவுடன் இணங்குவதில்லை. 2011 ஆம் ஆண்டில் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இற்கு அமைய தலைமை அலுவலகத்தின் சகலருக்கும் பணிக்கொடை ஒதுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 18

i. கணக்காய்வு வினாவுடன் இங்குகின்றோம். 2012 ஆம் ஆண்டு மூலதன குழுமக் கணக்கிற்கு சீராக்கல் செய்து சமர்ப்பிக்கப்படுகின்றது.

ii. கணக்காய்வு வினாவுடன் இங்குகின்றோம். குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இந்தக் காணி மற்றும் கட்டடம் குத்தகை உடன்படிக்கைக்கு அமைய குத்தகையை அதிகரித்துக் கொள்ளும் நோக்கத்துடன் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென்பதுடன், குறித்த முழுச் சொத்துக்கள் தொகுதியும் நியம இலக்கம் 18 இற்கமைய மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயினும், பாரியளவு பணத்தை செலவிடுவதற்கு நிறுவனத்தில் காணப்படுகின்ற நிதிசார் நெருக்கடி நிலைமை காரணமாக முடியாதுள்ளது.

iii. கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். 2012 ஆம் ஆண்டு முதல் ஒரேவிதமான கணக்கீட்டுக் கொள்கையொன்று பின்பற்றப்படுகின்றது.

(இ) கணக்கீட்டு நியம இலக்கம் 24

2012 ஆம் ஆண்டு நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றன.

2.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். 2012 இல் சீர் செய்யப்பட்டது.

(ஆ)(இ)பணிக்கொடை தொங்கல் கணக்கில் ரூபா 162,847,658 மற்றும் ரூபா 80,571,860 ஆன தொகைகள் 2011 இற்கான தோட்டங்களின் பணிக்கொடை ஒதுக்கமாகும் என்பதுடன், இந்தத் தொகைகள் 2012 ஆம் ஆண்டு இலாப நட்டக் கணக்கிற்கு சீராக்கல் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும். இதில் எஞ்சிய ரூபா 82,275,798 ஆன தொகை 2006 இற்கு முன் இருந்தே வருகின்ற மீதியாகும். பரீட்சை மீதியின் பணிக்கொடை ஒதுக்கல் கணக்கில் உள்ள ரூபா .8,826,844.78 இல் ரூபா 4,352,999 ஆன தொகை 2006 இற்கு முன்னர் இருந்தே காணப்பட்டு வருவதுடன், எஞ்சிய தொகையான ரூபா 4,473,846 கெலேபொக்க தோட்டத்தின் 2011 பணிக்கொடை ஒதுக்கமாகும். இந்தத் தொகை 2012 ஆம் ஆண்டில் இலாப நட்டக் கணக்கிற்கு சீராக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இணைப்புச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஈ) 2012 ஆம் ஆண்டு கணக்குகளில் பணிக்கொடை ஒதுக்குவதற்கான கணக்குகள் சீராக்கல் செய்யப்பட்டு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(உ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். 2012 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்கக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஊ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். 2012 ஆம் ஆண்டில் சீராக்கல்கள் செய்யப்படும்.

(எ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அடிக்கடி (அதாவது 1995 டிசம்பர் மாதம் கிரகரி வீதியிருந்து மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் கட்டடத்திற்கும், 2008 யூலை மாதம் டியுக் வீதின் தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் கட்டடத்திற்கும்) நிரந்தர சேவை நிலையம் இடமாற்றப்பட்டதன் காரணமாக அங்கு காணப்படுகின்ற இடவசதிகள், போக்குவரத்து ஆகிய விடயங்கள் காரணமாக பெரும்பாலான ஆவணங்கள் கைவிடப்பட்டு வந்ததன் காரணமாக இவ்வாறான சில ஆவணங்கள் காணாமல் போயுள்ளன. எனவே இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்துக்களும் தனித்தனியா வரலாற்றுக் கிரயம் மற்றும் தேய்மான ஒதுக்க அளவுகளை தேடிப்பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கிரயம் மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கங்களை கணக்குகளிலிருந்து நீக்க முடியாது போயுள்ளது.

(ஏ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். 2012 ஆம் ஆண்டில் சரியான கணக்குகளைச் சமர்ப்பிப்போம்.

(ஐ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். 2012 ஆம் ஆண்டில் சரியான கணக்குகளைச் சமர்ப்பிப்போம்.

(ஒ) கணக்காய்வு வினாவுக்கு அமைய நாம் பகிரங்கப்படுத்தியுள்ள இறுதிக் கணக்குகளில் உள்ள இலாப நட்டக் கணக்கின் 09 ஆம் இலக்க பக்கத்திலுள்ள மற்றும் எமது பேரேட்டுக் கணக்குகளுக்கு அமைய உள்ள இலாப நட்டக் கணக்கிற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. எனினும் எமது பேரேட்டுக் கணக்கிற்கு அமைய இலாப நட்டக் கணக்கின் மீதி சரியானதாகும். சரியான இலாப நட்டக் கணக்கு எமது பேரேட்டுக் கணக்கிற்கு அமைய பின்வருமாறாகும். இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விபரம்	கொடை	இலாபம் /நட்டம்	மொத்தம்
பேரேட்டுக் கணக்குகளுக்கு அமைய ஆரம்ப மீதி	1,571,137,549	(2,471,366,560.41	(900,229,011)
பேரேட்டுக் கணக்குகளுக்கு அமைய சரியான நட்டம்		(51,987,380.18)	(51,987,380.18)
பேரேட்டுக் கணக்குகளுக்கு அமைய மீள்மதிப்பீட்டு சேர்மம்		147,613,494.96	147,613,494.96
	1,571,137,549	(2,375,740,445.63)	(804,602,896.22)

(ஓ) சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 20 மில்லியன் ஆன கடன் தொகைக்காகச் செலுத்த வேண்டியவ ட்டி 2011 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. இதனை 2012 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கல் செய்து சமர்ப்பிப்போம்.

(ஔ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். 2012 ஆம் ஆண்டின் கொடைகளின் பெறுமதி மற்றும் இலாப நட்டக் கணக்கின் மீதிகளை தனித்தனியே காட்டுதவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.3.3. இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

(அ) கணக்காய்வு வினாவுடன் இணங்குவதில்லை.

தோட்டக் கணக்குகளுக்காக தயார் செய்யப்பட்டுள்ள பரீட்சை மீதியில் இந்தப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை வரவு மற்றும் செலவு மீதிகளாக பல்வேறு பொறுப்புக்கள் (Sundry Liabilities) ரூபா 1,050,514,528 ஆகவும், பல்வேறு சொத்துக்களாக (Sundry Assets) ரூபா 87,576,428 ஆகவும் காட்டப்பட்டுள்ளன.

பல்வேறு பொறுப்புக்கள்

தொழில் சங்கங்கள்	1,619,348
CPPS	465,842
ESPS	2,419,079
EPF	363,180,815
ETF	17,282,411
கடன்கொடுத்தோர்	40,085,801
ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டியவை (Workers payable)	55,566,640
பணிக்கொடை ஒதுக்கம்	396,321,632
பணிக்கொடை செலுத்த வேண்டியது	166,384,256
வருகைக்கான மிகைஊதியம் செலுத்த வேண்டியது	2,767,773
காப்புறுதி – காசுப்பாய்ச்சல்	728,674
செலுத்த வேண்டியவை	1,186,729
EPF –நீதிமன்றக் கொடுப்பனவுகள்	2,505,528
மொத்த பல்வேறு பொறுப்புக்கள்	1,050,514,528

பல்வேறு சொத்துக்கள்

பயிர்ச் செய்கை	35,312
வைப்பு	142,500
மூலதனச் செலவினம்	277,278
கடன் பட்டோர்	2,125,412
இருப்பு	10,287,338
EPF வைப்புக்கள்	56,489,844
அறவிடப்பட வேண்டியவை	16,490,600
கட்டுநிதி	5,775
கையிலுள்ள காசு	19,537
வங்கியிலுள்ள காசு	202,832
பணிக்கொடை வைப்பு	1,500,000
மொத்த பல்வேறு சொத்துக்கள்	87,576,428

இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வு வினாவுடன் இணங்குவதில்லை.

<u>பல்வேறு சொத்துக்கள் ரூபா **87,576,428**</u>

மேலே 2.2.3 (அ) குறிப்பில் குறிப்பிடப்பட்டள்ள மீதிகளின் கூட்டுத் தொகையாகும். மேற்படி மீதிகள் தனித்தனியாக கூட்டான இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது

<u>உப பயிர்ச் செய்கைகள் - கருவா ரூபா.**156,640**</u>

பேரேட்டுக் கணக்குகளில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் வெளியிடப்பட்ட கணக்குகளைத் தயார் செய்யும் போது தவறு இடம்பெற்றுள்ளது.

<u>செயற்பாட்டு(வரவு)ரூபா.**5,643,568**</u>

தோட்டங்களின் இலாப நட்டக் கணக்கான இதற்கு தோட்டங்களின் ஆரம்ப தேயிலை இருப்பு மற்றும் இறுதித் தேயிலை இருப்பை சீராக்கல் செய்யும் போது வருகின்ற கணக்கு மீதியாகும். இது தோட்ட வருமானம் மற்றும் செலவினத்தை சீராக்கல் செய்ய முன்னரான மீதியாகுமென்பதுடன், தோட்டங்களின் வருமானங்களின் கூட்டுத்தொகை மற்றும் செலவினங்களின் கூட்டுத்தொகையும் இந்தக் கணக்குகளுடன் சீராக்கல் செய்யப்பட்டு வருகின்ற இலாபம் அல்லது நட்டம் நடைமுறைக் கணக்கு ஊடாக தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்படுகின்றது. அதற்கமைய மேற்படி மீதிகளில் தோட்டங்களின் வருமானம் மற்றும் செலவினம் சீராக்கல் செய்யப்பட்ட பின்னர்

வருகின்ற அனைத்து தோட்டங்களினதும் இலாபம் அல்லது நட்டம் நடமாடும் கணக்கு ஊடாக தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளதன் காரணமாக இறுதியில் மீதி எஞ்சுவதில்லை. எனினும் இந்த மீதி இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இது சரியானதாகும்.

இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வைப்பு - ரூபா 142,500

Capital Development Working Progress (Note 19) இன் கீழ் புதிதாக மின்சாம் பெற்றுக் கொள்வதன் மூலம் குறிப்பிடப்பட்டள்ளது. அதற்கமைய இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பயிர்ச் செய்கைகள் - ரூபா.35,312

பிற்போடப்பட்ட சொத்துக்கள் குறிப்பு 18 இன் கீழ் மரம் நடுவதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கு - ரூபா 962,938,099

இந்தக் கணக்கு தோட்டங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு இடையே இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களை (வரவு மற்றும் செலவு) பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற நடைமுறைக் கணக்காகும். இந்தக் கணக்கின் மீதி மூலம் தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ள சகல வரவு மற்றும் செலவு மீதிகளிலுமுள்ள மாற்றங்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன. எனவே கூட்டு இறுதிக் கணக்குகளில் இந்தத் தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கு என்ற பெயரில் தனியொரு கணக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை.

(இ) கணக்காய்வு வினாவுடன் இணங்குவதில்லை.

நிழலுக்கான மறைப்புப் பயிர்ச் செய்கை (Shade & Organic) பீடைகளை கட்டுப்படுத்தல் (Pest Control)

இரண்டு வகையான செலவினங்களாக மாதாந்தக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் சில மாதங்களில் மேற்படி செலவினங்கள் இரண்டும் மாதாந்த கணக்குகளில் ஒன்றாக கூட்டப்பட்டுள்ளது. எனவே தோட்டங்களின் மாதாந்தக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியும், (12 மாதங்களினதும் கூட்டுத்தொகை) இறுதுிக் கணக்கிற்கு அமைவாக உள்ள பெறுமதியும் சரியானதாகும்.

இணைப்புச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து

தோட்டக் கணக்குகளுக்கு அமைய குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியில் தேயிலையைக் கொண்டு செல்லும் போது தேயிலை இருப்பில் ஏற்பட்ட குறைவை தேயிலையைக் கொண்டு செல்லும் போக்குவரத்து முகவருக்குச் செலுத்த வேண்டிய பட்டியலில் இருந்து குறைத்துக் காட்டும் போது இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன், தோட்டக் கணக்குக்கு அமைய காணப்படுகின்ற

செலவினம் சரியானதாக உள்ளதனால் 2012 இலாப நட்டக் கணக்கிற்கு சீராக்கல்கள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

விளையாட்டும், நலன்புரியும்

தோட்டக் கணக்குகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு விளையாட்டு மற்றும் நலன்புரி விடயம், அலுவலக ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நலன்புரிக்காக வழங்கப்படுகின்ற தேயிலை ஆகிய இரண்டு செலவினங்களையும் ஒன்றாக கூட்டியபின்னர் இறுதுக் கணக்குகளில் விளையாட்டும், நலன்புரியும் விடயத்தின் கீழ் ஒரு செலவினாமாக காட்டப்பட்டள்ளது. அத்துடன் இந்த அலுவலக ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுகின்ற தேயிலைச் செலவினம் பாகலவத்தையின் அதன் நடைமுறைக் கணக்கின் ஊடாக தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன், மேற்படி செலவினம் அத்தோட்டங்களுக்குரியவை என்பதனால் அதுவும் தலைமை அலுவலகத்தில் உரிய தோட்டக் கணக்குகளில் மேற்படி விடயத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அதற்கமைய குறிப்பிடப்பட்டுள்ள செலவினம் சரியானதாகும்.

கொழுந்து பறித்தல்/ ஒப்பந்த அடிப்படையில் கொழுந்து பறித்தல்

தோட்டத்தின் மாதாந்த கணக்கு அறிக்கையின் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செலவின அறிக்கையில் பொழுந்து பறித்தல் இலக்கம் 50 மற்றும் மேலதிக கொழுந்து பறித்தல் இலக்கம் 63 ஆகிய செலவினங்கள் இரண்டும் ஒன்றாக கூட்டப்பட்டுள்ளதுடன் கொழுந்து பறித்தல் செலவினம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தோட்டங்களின் கணக்குகளுக்கு அமைய ஒரு செலவினம் இறுதிக் கணக்குகளுக்கு அமைய செலவினமொன்றுக்கு இடையே வித்தியாசம் இல்லை என்பதுடன் இறுதிக் கணக்குகளில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

லீவுநாள் சம்பளம் செலுத்தல் / வருகைக்கான மிகையூதியக் கொடுப்பனவு

தோட்டக் கணக்குகளுக்கு அமைய மற்றும் இறுதிக் கணக்குகளுக்கு அமைய மேற்படி மீதிகள் சமமாகும். எனினும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளை தோட்டக் கணக்குகளுக்கு அமைய தேடிப்பெற்றுக் கொள்ள முடியாது.

விலைப் பகிர்வுக் குறைநிரப்பு - PSS-Price Share Supplement

ஓபல்கல தோட்டத்தின் கணக்குகளில் பொதுப் பணிகளுக்கான செலவினத்தின் (General Expenses) கீழ் விலைப் பகிர்வுக் குறைநிரப்பு PSS Price Share Supplement எனும் செலவினம் குறிப்பிடப்படுவதுடன், உற்பத்திச் செலவினத்தின் கீழும் PSS Price Share Supplement செலவினத்தின் ஒரு பகுதி குறிப்பிடப்பட்டுள்ளதனால், இறுதிக் கணக்குகளுடன் ஒப்பிடும் போது மேற்படி இரண்டு செலவினங்களையும் ஒன்றாகக் கூட்டி இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதனால் இந்த வித்தியாசம் காட்டப்படுகின்றது. எனினும் இறுதிக் கணக்குகளுக்கு அமைய காணப்படுகின்ற PSS Price Share Supplement செலவினம் சரியானதாகும்.

எல்லைகளும், வடிகால்களும் (Boundaries & Ravings)

தோட்டக் கணக்குகளுக்கு அமைய காணப்படுகின்ற மீதி இறுதிக் கணக்கிற்கு அமையவுள்ள மீதிகளுக்குச் சமமாகும். கணக்காய்வு அறிக்கையில் காணப்படுகின்ற மீதிகளைக் கண்டறிய முடியவில்லை.

தோட்ட அத்தியட்சகர் வாகனங்கள்

தோட்டக் கணக்குகளுக்கு அமைய காணப்படுகின்ற மீதிக்கும், எமது இறுதிக் கணக்கிற்கு அமையக் காணப்படுகின்ற மீதிக்கும் இடையே வித்தியாசம் இல்லை என்பதுடன், கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீதியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இறுதிக் கணக்குகளுக்கு அமைய மீதி சரியானதாகும்.

காவலாளி

கெலேபொக்கை தோட்டத்தின் மாதாந்த செலவின அறிக்கையின் 2 ஆம் பக்கத்தில் காவலாளிக்கான செலவின நிரல் மற்றும் மேலதிக காவலாளிக்கான செலவின நிரல் ஆகிய இரண்டும் ஒன்றுசேர்க்கப்பட்டு காவலாளிக்கான செலவினமாக தனியொரு செலவினமாக காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய தோட்டங்களின் இறுதிக் கணக்குகளின் செலவினம் மற்றும் இறுதிக் கணக்குகளின் செலவினங்களுக்கு இடையே வித்தியாசமில்லை. எனவே இறுதிக் கணக்கின் செலவினம் சரியானதாகும்.

காப்புறுதி

காப்புறுதிச் செலவினக் கணக்குகள் ஆண்டின் இறுதியில் தோட்ட நடைமுறைக் கணக்கு ஊடாக தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அதற்கமைய கொட்டகங்க தோட்டத்தில் மாத்திரம் இந்த மாற்றல் செய்யப்படாமை காரணமாக கொட்டகங்கவுக்கு ஏற்புடைய பெறுமதி மாத்திரம் இறுதுக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதனால் இந்த வித்தியாசம் உள்ள போதிலும், இறுதிக் கணக்குகளுக்கு அமைய தற்போதுள்ள மீதி சரியானதாகும்.

வருமானம் - கம்புத் தேயிலை விற்பனை

இறுதிக் கணக்கிற்கு அமைய கம்புத் தேயிலை விற்பனை வருமானம் பெறப்பட்டிருப்பது தோட்டங்களின் மாதாந்தக் கணக்கு அறிக்கைகளிலுள்ள நடைமுறைக் கணக்கு ஊடாக தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ள கம்புத் தேயிலை விற்பனை மூலம் க்டைத்துள்ள இலாபம் அல்லது நட்டம் மாத்திரமாகும். (இங்கு இலாபம் அல்லது நட்டம் கணிப்பிடப்படுவது குறித்த தோட்டங்களிலிருந்தாகும்). அதற்கமைய இறுதிக் கணக்குகளுக்கு அமைய கம்புத் தேயிலை விற்பனை செய்வதன் மூலம் கிடைத்த வருமானம் சரியானதாகும் என்பதுடன் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 140,566 ஆன தொகையை கண்டுபிடிக்க முடியவில்லை.

சேதமடைந்த பொருட்களை விற்பனை செய்தல்

சேதமடைந்த பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட பணம் தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்தமை பற்றி உரிய தோட்டங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய தோட்டங்களின் பேரேட்டுக் கணக்குகளுக்கு அமைய இந்த சேதமடைந்த பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த பணத்தின் மீதி சரியானதாகும்.

இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஈ) கணக்காய்வு வினாவுடன் இணங்குவதில்லை.

வலஹந்துவை தோட்டம்

சம்பளமும், கொடுப்பனவுகளும் / ஊழியர் நம்பிக்கை நிதியம்/ நிலுவை செக்ரோல், சம்பளம், தோட்ட அத்தியட்சகர் வாகனம் /மருத்துவ உதவி/காப்புறுதி

வலஹந்துவை தோட்டத்தில் சேவையாற்றுகின்ற திரு வசந்த கீர்த்தியின் முழுச் சம்பளமும், அது தொடர்பான நியாயாதிக்க கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது தலைமை அலுவலகத்தினூடாக என்பதனால் அவரின் சம்பளம் மற்றும் ஏனைய நியாயாதிக்க கொடுப்பனவுச் செலவினங்கள் அனைத்யும் தலைமை அலுவலகத்தில் வலஹந்துவை தோட்டக் கணக்கை தயார் செய்யும் போது வலஹந்துவை தோட்டச் செலவினங்களுடன் கூட்டுவதனால் மற்றும் வலஹந்துவை தோட்ட அத்தியட்சகர் இங்கிரிய தோட்டத்திலும் பதில் கடமையாற்றுவது தொடர்பாக அவரின் சம்பளங்கள், கொடுப்பனவு மற்றும் ஏனைய செலவனங்களிலிருந்து பாதியை இங்கிரிய தோட்டத்தில் பதில் கடமையாற்றுவதற்காக மேற்படி செலவினங்களிலிருந்து குறைத்து தலைமை அலுவலகத்தினால் இங்கிரிய தோட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளதன் காரணமாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள தோட்டங்களின் கணக்குகளின் மீதிகள் மற்றும் இறுதிக் கணக்கிலுள்ள மீதிகளுடன் சமமானதாக இல்லாத போதிலும் இறுதிக் கணக்குக்கு அமைய உள்ள மீதிகள் சரியானவையாகும்.

காப்புறுதி

வலகந்துவ தோட்டத்தின் தோட்ட நடைமுறைக் கணக்கின் ஊடாக தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ள காப்புறுதிக்கான செலவின ஒதுக்கம் வலகந்துவ தோட்டத்தின் டிசெம்பர் மாத இறுதிக் கணக்குகளின் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதிச் செலவினத்தையும் பார்க்க அதிகமான பெறுமதியைக் கொண்டிருப்பதனால் காப்புறுதிச் செலவினம் மறை பெறுமதியைக் கொண்டுள்ளது. ஏனைய தோட்டங்களில் காப்பறுதிச் செலவினம் இறுதிக் கணக்குகளுடன் ஒப்பிடும்போது சீராக்கப்படுவது இவ்வாறாக உள்ள போதிலும் அங்கு காப்புறுதிச் செலவினம் காப்பறுதிச் செலவின ஒதுக்கீடு ஆகிய விடயங்கள் இரண்டும் சமமாக இருப்பதனால் காப்புறுதிச் செலவினம் பூச்சிய பெறுமதியைக் கொள்கின்றது. அதற்கமைய இறுதிக்கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் சரியானதாகும்.

வலகந்துவ தோட்டத்தின் வருமானக் கணக்கு மற்றும் செலவினக் கணக்குகள் இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்படுவதற்கு முன்னர் பிராந்திய அலுவலகத்தின் கணக்கு மீதி ரூபா 15,466,632 என்பதுடன் வருமான செலவினக் கணக்கின் இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்ட பின்னர் பிராந்திய அலுவலக கணக்கின் மீதி (ரூபா. 1,093,422.87) ஆகும். இந்த செலவு மீதிக்கு வலகந்துவ தோட்டத்தின் இலாபத்திற்கு (ரூபா. 16,560,054,59) சேர்க்கப்பட்டுள்ள இறுதிக்கணக்குகளில் ரூபா. 17,653,477ஆக பிராந்திய அலுவலக கணக்கில் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இறுதிப்பெறுபேறுக்கு இதனால் தாக்கங்கள் ஏற்படவில்லை.

(உ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். இது சாதிக்காய் துணைப்பயிர்ச் செய்கையின் நட்டமாகும். இது இணைந்த இறுதிக்கணக்குகளை தயார்செய்யும்போது இடம்பெற்ற தவறாகும். எனினும் பேரேட்டுக் கணக்கிற்கு அமைய சரியாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

(ஊ) கணக்காய்வு வினாவுடன் இணங்குவதில்லை

கணக்காய்வு அறிக்கையின் இறுதி மீதியாக குறிப்பிடப்பட்டிருப்பது 2010ஆம் ஆண்டின் வருமான செலவினக் கணக்கு இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்படுவதற்கு முன்னரான மீதிகளாகும். இது 2010ஆம் ஆண்டின் தோட்டங்களின் வருமான செலவினக் கணக்குகளின் மீதிகளை இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றிய பின்னர் 2010ஆம் ஆண்டின் மீதிகளை பரீட்சை மீதியில் வரும் மீதிகள் 2011ஆம் அண்டின் ஆரம்ப மீதிகளுடன் சமமானதாக உள்ளன.

இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

(எ) கணக்காய்வு வினாவுடன் இணங்குவதில்லை

இறுதிக்கணக்கிற்காக தோட்டப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் செலவின அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவு தோட்டங்களின் பேரேட்டுக் கணக்கிற்கு அமைய சரியானதாகும். தேய்மானத்தை கணிப்பிடுவதற்காக தயார்செய்யப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளடங்குவது தற்போது தேய்மானம் செய்யப்பட்டுவருகின்ற சொத்துக்களின் செலவினம் மாத்திரமாகும். அதன் ஆரம்ப மீதி குறிப்பிடப்படாமையினால் வித்தியாசம் காட்டப்படுகின்ற போதிலும் பேரேட்டுக் கணக்குகளுக்கமைய காணப்படுகின்ற மிதி சரியானதாகும்.

(ஐ) செயற்படாக் கணக்கு பற்றிய தகவல்கள் எதிர்காலத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ)(ஆ)(இ)கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை சீராக்கிக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வோம்.

2.3.5 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

நிலையான சொத்துக்கள் / தேய்மான ஒதுக்கீடு – தலைமை அலுவலகம்

எமது நிறுவனத்தினால் அடிக்கடி சேவை நிலையம் மாற்றப்பட்டமை காரணமாக அத்தியாவசியமான பல ஆவணங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் எடுத்துவரப்படாமையினால் இந்த நிலையான சொத்துக்கள் சம்பநச்தமாக முறையாகப் பேணிவரப்பட்ட ஆவணங்களை தேடிப்பபெற்றுக்கொள்ள முடியவில்லை.

வைப்புக்கள் ரூபா. 126,253,215 (T/B)

நிலையான வைப்பு - ரூபா.57,.482,590

இதற்காக தலைமை அலுவலகத்தின் கணக்குகள் பிரிவில் கோப்பு ஒன்று உள்ளது. இதனை கணக்காய்வு பிரிவுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்வோம்.

வைப்புக்கள் ரூபா. 68,770,625 (குறிப்பு -22)

வைப்புக்களாக மேலேயுள்ள பெறுமதி வெளிப்படுத்தப்பட்டுள்ளது எமது தோட்டங்களின் ஊழியர்களது சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை வழக்குகளுக்கான தவப்பணமாக செலுத்தப்பட்ட தொகையாகும். இந்த தொகைக்குரிய வழக்குக்கு கொடுப்பனவுகளைச் செய்து முடிக்கும்வரை தற்காலிகமாக இவ்வாறு வைப்புக்கணக்கு ஒன்று காட்டப்பட்டுள்ளது. குறித்த வழக்குக்கு பூரணமாக கொடுப்பனவுகள் செலுத்தி முடிக்கப்பட்ட பின்னர் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியம், செலுத்த வேண்டிய பணிக்கொடை கணக்குகளுக்கு வரவு வைத்து மேற்படி வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படும். தோட்ட அலுவலகங்களில் இது சம்பந்தமான உறுதிப்படுத்தக் கூடிய அவணங்கள் உள்ளன.

கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் மற்றும் அறவிடப்பட வேண்டிய மீதிகள்

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் முடிந்தளவுக்கு சரியாக சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்வோம். அத்துடன் சில கடன்பட்டவர்களும் கடன் கொடுத்தவர்களுக்கும் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் உள்ளன. சேவையிடத்தின் அமைவிடம் அடிக்கடி மாற்றப்பட்டதன் காரணமாக பல்வேறு ஆவணக்கோப்புகள் காணாமல் போயுள்ளன.

2.2.6. சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடையதாகாமை

(அ) சட்டங்கள்

(i) 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(i) பிரிவு

மேற்படி சட்டத்திற்கு அமைய எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ii) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்

(iii) 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டம்

நிறுவனம் தொடர்ச்சியாக எதிர்நோக்கியுள்ள கடும் நிதி நெருக்கடி நிலைமை காரணமாக மேற்படி சட்டங்கள் (ii) (iii) அகியவற்றுக்கு அமைவான கொடுப்பனவுகளை செலுத்த நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை.

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள்

(i) நிதிப்பிரமாணம் 135,135(5)

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். குறைபாடுகளை சீராக்கிக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ii) நிதிப்பிரமாணம் 371:2-(அ)(இ)

பதவிநிலை அலுவலர்கள் நிறுவனத்தில் இல்லாமையினால் தவிசாளர், பொது முகாமையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவிநிலை அல்லாத அலுவலர்களுக்கு முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பதவிநிலை அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் மேற்படி ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(iii) நிதிப்பிரமாணம் 372(ஆ)(ஈ)

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(iv) நிதிப்பிரமாணம் 386

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(v) நிதிப்பிரமாணம் 1645

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

(vi) நிதிப்பிரமாணம் 1646

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

(இ) இலங்கை குடியரசின் தாபனவிதிக் கோவை

(i) (ii)

viii ஆம் அத்தியாயத்தின் 10.1(அ) பிரிவு / viii ஆம் அத்தியாயத்தின் 10.3ஆம் பிரிவு மற்றும் 1997 மே 27ஆந் திகதிய 118(அ) ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை

மேலுள்ள விடயத்திற்கு உங்களின் EL/G/SLSPC/2011/A01/09ஆம் இலக்க 2011.12.12ஆந் திகதிய தகவல்களைக் கோருவது தொடர்பாக நாம் வழங்கியுள்ள பதிலுக்கு மேலதிகமாக பின்வரும் விளக்கத்தை சமர்ப்பிக்கின்றோம்.

தாபனவிதிக் கோவையின் viiiஆம் அத்தியாயத்தின் 10.1(அ)(ஆ)விற்கமைய செலுத்தக்கூடிய உச்சளவான நாட்களின் எண்ணிக்கை ஒரு மாதத்திற்கு எட்டு நாட்களாகும். 10.3ஆம் பிரிவுக்கு அமைய திணைக்கள (நிறுவனத்தலைவர்) தலைவரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தாபன விதிக்கோவையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபன மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்காக 1996 மார்ச் மாதம் 05ஆந் திகதிய அப்போதிருந்த பொது முகாமையாளர் திரு. மடவலவினால் வெளிப்பிட்டுள்ள உள்ளக பத்திரத்திற்கு அமைய 1996ஆம் ஆண்டு முதல் இதுவரை காலம் கொடுப்பனவொன்று நிறைவேற்றுத் தரத்தின் அலுவலர்களுக்கு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் சேவையில் ஈடுபடுவதற்காக ஒரு கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது. இது இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் உள்ளக சுற்றறிக்கையின் அடிப்படையில் செய்யப்பட்ட கொடுப்பனவாகும். 1996 முதல் பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுபற்றி இதற்கு முன்னர் கணக்காய்வு வினாக்கள் எமது நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது (உள்ளக சுற்றறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளது)

(ஈ) சுற்றறிக்கைகள்

(i) 2003 பெப்ருவரி 02ஆந் திகதிய 12ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை

சுற்றறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

(ii) 2006 வளங்கள் வழிகாட்டல் தொகுப்பு

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். அதற்கமைய குறைபாடுகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.2.7. கருத்து முரண்பாடுகளுக்கு காரணமாகின்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 12,215,142 அளவு நிருவாக செலவினங்கள அன்றி பொதுப்பணிகளுக்கான செலவினமாக செய்ய வேண்டும் என்பதுடன் அந்த பொதுப்பணி செலவினத்தில் இஇருந்து குறைக்கப்பட்டுள்ள அளனவு மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினம் மற்றும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மூலதனச் செலவினங்களுக்கான பொதுப்பணிக்கான செலவினத்தில் இருந்து ஒதுக்கிக் கொள்ளப்பட்ட அளவாகும். இது மீண்டும் பயிர்ச்செய்கையின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கிறகரி வீதியின் காணியை விற்பனை செய்தல்

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம்.

குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் தற்போது இந்தக் கொடுக்கல் வாங்கலின் பின்னர் கிறகரி வீதியின் காணி பற்றிய இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு உரிமைகள் இல்லை.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் பெறுபேறு

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம்

3.2 விரிவான நிதிசார் மீளாய்வு

(அ) நிதிசார் பெறுபேறு

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம்

(ஆ) நிதி நிலைமை

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம்

3.3 மூலதனக் குறைவு

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம்

3.4 செயற்படு மூலதன முகாமைத்துவம்

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். தேயிலை உற்பத்தி நீண்டகாலமாக குறைவடைகின்ற போக்கை வெளிப்படுத்துவதற்கு பின்வரும் பிரதான காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன.

- விதை தேயிலை மரங்களில் இருந்து கிடைக்கின்ற தேயிலைக் கொழுந்துகளின் அளவு கம்புத்தேயிலை மரங்களில் இருந்து கிடைக்கின்ற தேயிலைக் கொழுந்துகளின் அளவைவிட குறைதல். இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்துக்கு உரிதத்ான அதிகமான காணிகளில் இந்த விதைத் தேயிலை மரங்களைக் கொண்ட தேயிலைக் காணிகள்தான் இருக்கின்றன.

- 50 வருடத்தும் அதிககாலம் பழமைமிக்க தேயிலை செய்கை எம்மிடம் உள்ளமை

- செயற்படு மூலதனத்தின் குறைபாடு காரணமாக உரியவாறு தேவையான பசளை இரசாயனப்ப பொருட்களை பெற்றுக்கொடுக்க முடியாமை.

- ஒரு ஹெக்டயருக்கு காணப்பட வேண்டிய குறிப்பிட்ட தேயிலை மரங்களின் எண்ணிக்கை இல்லாமை

(ஆ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். இதற்கான காரணங்கள் மேலே 4.1(அ)இன் கீழ் வழங்கப்பட்டுள்ள நிலைமையாகும்.

(இ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். இதற்கு பின்வரும் காரணங்கள் வழிவகுத்துள்ளன. ஒரு கிலொகராம் தேயிலையின் விற்பனை விலை குறைவடைதல் மற்றும் ஒரு கிலோ கிராம் தேயிலையின் உற்பத்திச் செலவினத்தை அதிகரிப்பதில் பின்வரும் காரணங்கள் தாக்கம் செலுத்தியுள்ளன.

விற்பனை விலை குறைவடைவதற்கான காரணங்கள்

- ❖ உலக சந்தையில் தேயிலையின் கேள்விக்கு காணப்படுகின்ற நிலைமை

- ❖ எமது உற்பத்திச் சாலைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதியளவு மூலதனம் இல்லாமையினால் நல்ல தரமான தேயிலை உற்பத்தி இடம்பெறாமை

- ❖ மோசமான நிதி நிலைமை காரணமாக தேயிலை தரகர்களிடமிருந்து முற்பணம் பெற்றுக்கொள்வதனால் தேயிலையை விற்பனை செய்யும்போது அவர்களின் அழுத்தங்களுக்கு உட்பட வேண்டி ஏற்படுவதனால் தேயளிலையின் விலை குறைவடைதல்.

- ❖ ஒரு கிலோகிராம் தேயிலையின் உற்பத்திச் செலவினம் அதிகரிபப்தற்கான காரணிகள்

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை கூட்டு உடன்படிக்கை மூலம் மற்றும் அரசியல் அழுத்தங்களின் அடிப்படையில் தொழிலாளர்களின் சம்பளங்கள் அதிகமான பெறுமானங்களில் அதிகரிக்கப்படுவதனால் உற்பத்திச் செலவினம் அதிகரிக்கின்றது. இது நேரடியாக தாக்கம் செலுத்தும் ஒரு காரணியாகும்.

4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ)(ஆ)(இ)(ஈ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமான கணக்காய்வு வினாக்களுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வோம்.

(உ) நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கையாக ஊழியர் நம்பிக்கை நிதியம் ஊழியர் பணிக்கொடை மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தை செலுத்தாமையினால் ஏற்படுகின்ற மிகைக்கட்டணத்திற்கு ஒதுக்கங்கள் செய்யப்படுவதில்லை என்பதுடன் குறித்த ஆண்டில் மிகைக்கட்டணத்துடன் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட பின்னர் அந்த மிகைக்கட்டணங்கள் உரிய ஆண்டின் செலவினமொன்றாக இலாபநட்டக் கணக்கில் காட்டப்படுகின்றது.

(ஊ) இதனைப் பரிசீலனை செய்து தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்வேன்.

(எ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் குறைபாடுகளை சீராக்கிக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஒ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம்.

(ஓ) காணி நிர்வாகம்

(i)(ii)(iii)(v)(vi)(vii)(viii)

மேலேயுள்ள இலக்கங்கள் சம்பந்தமான கணக்காய்வு வினாக்களுடன் இணங்குகின்றொம்.

காணப்பட்ட குறைபாடுகளை சீராக்கிக் கொள்வதற்கும் குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

விபரங்களை உள்ளடக்கிய இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(iv) கணக்காய்வு வினா பூர்த்தியானதாக இல்லாமையினால் தகவல்களை வழங்க முடியாதுள்ளது.

(x) வைத்தலாவ தோட்டம்

இது சம்பந்தமான மேலதிக பரிசீலனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளதனால் எதிர்காலத்தில் தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(xi) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். இது சம்பந்தமாக ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஔ) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். WP 5690 எனும் இலக்க கார் எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியின் தவிசாளரின் உபயோகத்துக்காக பயன்படுத்தப்பட்டதுடன் எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியில் இந்த கூட்டுத்தாபனத்தின் தவிசாளராக நியமனம் பெற்றுவந்த தவிசாளர் தோட்டத்தை சுற்றிப்பார்க்கும் நடவடிக்கைகளுக்காக கார் வண்டியை விட ஜீப் வண்டி பொருத்தமானது எனத்தீர்மானித்து 32-0600 எனும் இலக்க ஜீப் வண்டியை பயன்படுத்தியிருக்கின்றார். வாகனப்பரிமாற்றம் சம்பந்தமாக ஏற்புடைய ஆவணங்களை பூர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்வோம்.

(∴) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். இந்த கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான 32-3758 இலக்க ஜீப் வண்டி புதுப்பிக்கும் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டது முதல் அதன் பின்னர் இடம்பெற்றுள்ள சகல நடவடிக்கைகளும் சட்டவிரோதமாகவும் முறைகேடுகளுக்கும் உட்பட்டு இடம்பெற்றுள்ளன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருவதுடன் இலஞ்ச ஊழல்கள் பற்றிய சார்த்துகள் சம்பந்தமாக ஆராயும் ஆணைக்குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(க்) கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் சீராக்கிக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வோம்.

4.3 கருத்து முரண்பாடுகளுக்கு காரணமாக அமையும் விடயங்கள்

4.4 குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள்

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் இந்த சொத்துக்களைப் பயன்படுத்திக் கொள்வது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம்.

தரகர்களுக்கு முற்பணம் வட்டி / ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கொடுப்பனவுகள் செலுத்துவதை தவறவிடுவதனால் மிகைக்கட்டணம் / கடன்வட்டி

நிறுவனத்தில் தொடர்ந்து நிலவிவருகின்ற கடும் நிதி நெருக்கடியின் மத்தியில் அன்றாட அவசிய கொடுக்கல் வாங்கல்களை பேணிவருவதற்காக தேயிலை தரகர்களிடமிருந்து முற்பணங்களை பெற்றுக்கொள்ளல், வங்கிகள், வேறு நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுக்கொள்ள நெர்ந்துள்ளதனால் அதற்கான வட்டியை செலுத்த வேண்டியுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு உரியவாறு செலுத்த முடியாமையினால் அதன் காரணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளுக்கு மிகைக்கட்டணங்களும் செலுத்தப்பட்டுள்ளன.

<u>உதவி</u>

சமூக, பொருளாதார தேவைகளின் அடிப்படையில் இவ்வாறான கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

<u>சட்டத்தரணிகள் கட்டணம்</u>

எதிர்காலத்தில் இவ்வாறான செலவினங்களைக் குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4.6 <u>இனங்காணப்பட்ட நட்டங்கள்</u>

இது தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படாமை காரணமாக பதில் அளிக்க முடியாது.

5. <u>கணக்கின் நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி</u>

5.1 கூட்டுத்திட்டம்

கூட்டுத்திட்டத்தில் காணப்பட்ட சகல விடயங்களையும் அமுல்படுத்துவதற்கான நல்லதொரு நிதி நிலைமை நிறுவனத்திடம் இன்மையும், அமுல்படுத்துவதில் உள்ள பல்வேறு சிக்கலான நிலைமையும் இதற்கான காணரமாகும்.

5.2 <u>செயல்ரீதியான திட்டம்</u>

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் குறைபாடுகளை சீராக்கல் செய்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்வோம்.

5.3 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு</u>

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம்.

5.4 <u>வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு</u>

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். இந்த நிலைமைகளை எதிர்காலத்தில் குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வோம்.

5.5 <u>ஆண்டு அறிக்கைகளை அவையில் சமர்ப்பித்தல்</u>

கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம். எதிர்காலத்தில் தாமதங்களைத் தடுத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வோம்.

6. <u>ஒழுங்கமைப்பும், கட்டுப்பாடும்</u>

(1)(2)(3)(4)(5)(6)

மேலே உள்ள இலக்கங்களின் கீழ் கணக்காய்வு வினாவுடன் இணங்குகின்றோம்.

எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளைத் தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வோம்.

.....

கலாநிதி விமல் விமலதாச

தவிசாளர் /பிரதம நிறைவேற்று பணிப்பாளர்

இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்